CPS

# அடிப்படை தர தகுதிநிலைகள்

அரச வழக்குத் தொடுத்தல் சேவை

மார்ச் 2010

Core Quality Standards
Tamil edition, March 2010

# அடிப்படை தர தகுதிநிலைகள்

அரச வழக்குத் தொடுத்தல் சேவை

மார்ச் **2010**

# முன்னுரை

அரச வழக்குத் தொடுத்தல் சேவை (கிரௌன் ப்ராசிக்யூஷன் சர்விஸ்) (The Crown Prosecution Service) (CPS) என்பது இங்கிலாந்துக்கும் வேல்ஸுக்குமான பிரதானமான பொது வழக்குத் தொடுத்தல் சேவையாகும். ஜனவரி 2010 இல், அது வருவாய் மற்றும் சுங்க வழக்குகள் அலுவலகத்துடன் (RCPO) ஒன்றிணைக்கப்பட்டது. இந்தச் சேவையானது பொது வழக்குகள் இயக்குநரால் (DPP) தலைமையேற்று இயக்கப்படுகிறது, மேலும் இவரே வருவாய் மற்றும் சுங்க வழக்குகளின் இயக்குநரும் ஆவார். DPP தனது செயல்பாடுகளை தனிப்பட்ட முறையில் சார்பின்றி செய்கிறார், அவரது செயல்பாடுகள் அனைத்தும், நாடாளுமன்ற வழக்கு நடவடிக்கை சேவையின் பணிகளுக்கு பொறுப்பான சட்டத்தலைமை அலுவலரின் (அட்டார்னி ஜெனரல்) மேற்பார்வைக்குரியதே ஆகும்.

இந்தத் தரத்தில், *வழக்குரைஞர்கள்* என்ற சொல்லானது பின்வருபவர்களை விவரிக்கப் பயன்படுத்தப்படுகிறது: அரச வழக்குரைஞர்கள் பதவியிலுள்ள வழக்குத் தொடுத்தல் சேவை உறுப்பினர்கள்; RCPO இன் உறுப்பினர்களாக உள்ள வழக்குரைஞர்கள்; 1985 ஆம் ஆண்டின் குற்ற வழக்கு சட்டம் 7A பிரிவின் கீழ் இணை வழக்குரைஞர்களாக பதவியில் உள்ளவர்கள் மற்றும் DPP வழங்கிய வழிமுறைகளுக்கு இணங்கி தங்கள் வழக்குத் தொடுத்தல் அதிகாரத்தின் மூலம் வழக்கு நடைமுறைகளில் ஈடுபடுபவர்கள்; மற்றும் 2005 ஆம் ஆண்டின் வருவாய் மற்றும் சுங்க ஆணையர்கள் சட்டம் 39 ஆம் பிரிவின் கீழ், DPP அதிகாரி தனது அதிகார வரம்புக்குட்பட்டு வருவாய் மற்றும் சுங்க வழக்குகள் இயக்குநராக நியமிக்கப்பட்ட RCPO இன் பிற உறுப்பினர்கள். நீதிமன்றத்தில் எங்கள் சார்பாக வழக்கு நடத்தும் வழக்குரைஞர்கள் மற்றும் தனிப்பட்ட முறையில் பயிற்சி பெறும் பேரிஸ்டர்கள் அல்லது சொலிசிட்டர்களை விவரிக்க, *வழக்குரைஞர்கள்* என்ற சொல்லை நாங்கள் பயன்படுத்துவோம்.

தங்கள் முடிவுகளைச் செயல்படுத்த பெரும்பகுதி பணிகளை மேற்கொள்ளும் சட்ட ஆலோசனைப் பணியாளர்களும், வழக்குகளின் நிலையைக் கண்காணித்தல், மற்ற முகமைகளுடன் மத்தியஸ்தராகச் செயல்படுதல், உள்வரும் ஆவணங்களை வழக்கு தொடர்பான கோப்புகளுடன் சரிபார்த்தல், நகலெடுத்தல் மற்றும் ஆவணங்களை அனுப்புதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் நிர்வாகப் பணியாளர்களும் வழக்குரைஞர்களுக்கு உதவியாகச் செயல்படுவர்.

இந்தத் தரத்தில், *காவல்துறை அல்லது பிற விசாரணையாளர்கள்* என்ற சொற்கள், வழக்குத் தொடுத்தல் சேவைக்காக வழக்குகளை ஆயத்தப்படுத்தி வழங்கும் சீரியஸ் ஆர்கனைஸ்டு கிரைம் ஏஜென்ஸி மற்றும் UK பார்டர் ஏஜென்ஸி ஆகியன உள்ளிட்ட அனைத்து விசாரணை முகமைகளின் உறுப்பினர்களையும் குறிக்கும்.

ஒரு குற்றம் செய்யப்பட்டிருக்கலாம் என்ற குற்றச்சாட்டுகளைப் பற்றி விசாரணை மேற்கொள்வது காவல்துறை மற்றும் பிற விசாரணையாளர்களின் பொறுப்பாகும். மிகவும் பாரதூரமான அல்லது சிக்கலான வழக்குகளில், குற்றச்செயல் புரிந்ததாக ஒருவர் மீது வழக்குத் தொடுக்க வேண்டுமா என்பது பற்றி வழக்குரைஞர்கள் முடிவெடுக்கின்றனர், அப்படி தொடுக்க வேண்டுமென்றால், அந்தக் குற்றம் எதுவாக இருக்கும் என்பது பற்றியும் அவர் முடிவெடுப்பார். மற்ற வழக்குகளில், சந்தேகத்திற்குரிய நபர் மீது குற்றம் சாட்டவோ அல்லது அவரை விசாரணை செய்யவோ காவலர்கள் அழைக்கலாம், ஆனால் ஒரு வழக்கு தொடர வேண்டுமா என்பது குறித்து முடிவெடுக்கும் பொறுப்பு வழக்குரைஞர்களுடையதாகும். வழக்குத் தொடுத்தல் சேவையானது காவல்துறை மற்றும்

விசாரணையாளர்களுடன் நெருங்கி பணி புரிந்தாலும், அது அவர்களைச் சார்ந்திருப்பதில்லை. வழக்குரைஞரின் இந்தச் சார்பற்ற தன்மையானது அரசியலமைப்புச் சட்ட முக்கியத்துவத்தின் அடிப்படையாகும்.

வழக்குத் தொடுத்தல் சேவையின் உறுப்பினர்கள் நேர்த்தியாகவும், சார்பற்றவர்களாகவும், குறிக்கோள் சார்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் தங்கள் முடிவுகள் அல்லது செயல்களைப் பாதிக்கக்கூடியவகையில், சந்தேகத்திற்குரிய நபர், பிரதிவாதி, பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகள் எவருடைய கலாச்சாரம் அல்லது தேசிய பூர்வீகம், பாலினம், உடல் இயக்கக் குறைபாடு, வயது, மதம் அல்லது நம்பிக்கை, அரசியல் கண்ணோட்டங்கள், பாலினக் கவர்ச்சி வகை, அல்லது பாலின அடையாளம் ஆகியவை சார்ந்த தனிப்பட்ட கண்ணோட்டத்தை அனுமதிக்கக்கூடாது. வழக்கு நடவடிக்கை முடிவுகளை அவர்கள் மேற்கொள்ளும்போது, இனம், உடல் இயக்கக் குறைபாடு மற்றும் பாலியல் சம உரிமை கொள்கைகளை மேம்படுத்தும் பொது அமைப்புகளின் சட்ட திட்டங்களுக்கு உட்பட வேண்டும்.

இந்தத் தரத்தில், சந்தேகத்திற்குரிய நபர் என்னும் சொல்லானது, இன்னும் முறையான குற்ற வழக்குத் தொடுத்தலுக்கு உட்படுத்தப்படாத ஒரு நபரை விவரிக்கப் பயன்படுத்தப்படுகிறது; பிரதிவாதி என்னும் சொல்லானது குற்றம் சாட்டப்பட்ட அல்லது அழைப்பாணை வழங்கப்பட்ட நபரை விவரிக்கவும்; "குற்றவாளி" என்னும் சொல்லானது காவல் அதிகாரி அல்லது பிற விசாரணையாளர் அல்லது வழக்குரைஞரிடம் தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட அல்லது குற்றம் செய்தவர் என்று நீதிமன்றத்தால் கண்டறியப்பட்ட நபரை விவரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

அடிப்படை தர தகுதிநிலைகள் சிற்றேடானது, வழக்குத் தொடுத்தல் சேவையின் நோக்கம், மற்றும் பணியை விளக்கும், முக்கியமாக வெளியிடப்பட்ட மற்றும் பொதுவாகக் கிடைக்கக்கூடிய இரு ஆவணங்களில் ஒன்றாகும். அரச வழக்குரைஞர்களுக்கான நெறிமுறை இரண்டாவதாகும். நெறிமுறை மட்டுமே சட்டத்தால் வழங்கப்படுவதாகும். இரண்டும் சேர்ந்து, வழக்குரைஞர்கள் என்ன செய்வார்கள்; அவர்கள் எவ்வாறு முடிவெடுப்பார்கள் என்பது பற்றியும்; மற்றும் தனது பணியின் முக்கிய அம்சம் ஒவ்வொன்றிலும் வழக்குத் தொடுத்தல் சேவை பொறுப்புடன் செயல்படக் கடமைப்பட்டுள்ள சேவையின் அளவையும் பொதுமக்கள் தெரிந்துகொள்ள உதவுகின்றன.

அடிப்படை தர தகுதிநிலைகள் சிற்றேடும், நெறிமுறையும் இந்தச் சிற்றேட்டின் பின் அட்டையில் பட்டியலில் வழங்கப்பட்டுள்ள தொடர்பு மையங்களில் கிடைக்கும்.

# அறிமுகம்

பொதுமக்களைப் பாதுகாப்பதும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு ஆதரவளிப்பதும், நீதியை வழங்குவதுமே CPS மற்றும் RCPO ஆகியவற்றின் அடிப்படை பங்கு மற்றும் நோக்கமாகும்.

**பொது மக்களைப் பாதுகாத்தல்:** வழக்குரைஞர்களாக, குற்றச்செயல்களைக் குறைப்பதிலும், பொதுமக்களைப் பாதுகாப்பதிலும் எங்களுக்கு மிக முக்கிய பங்கு இருக்கிறது. நாங்கள் வெளிப்படையாகவும் பொறுப்புடையவர்களாகவும்; பிரதிநிதியாகவும் பலவகையில் உதவியாக இருப்போம். நாங்கள் சேவைபுரியும் சமூகங்களிடம் வெளிப்படையாகவும், நேர்மையான முறையிலும் நடந்து கொள்வோம். பொதுமக்கள் மீது அக்கறையுடைவர்களால் எங்கள் முடிவுகள் அறிவிக்கப்படும்.

**பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு ஆதரவளித்தல்:** குற்றவியல் நீதி செயல்பாட்டின் அனைத்து நிலைகளிலும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் ஆக்கபூர்வமான பங்கேற்பை நாங்கள் செயல்படுத்துவோம், ஊக்கமளிப்போம், ஆதரவளிப்போம்.

**நீதி வழங்குதல்:** வழக்குத் தொடுத்தல் நடவடிக்கை தொடர்பாக, சரியான நேரத்தில், சரியான நபர், சரியான முடிவை எடுப்பதை நாங்கள் உறுதிப்படுத்துவோம். மிகவும் பயனுள்ள திறமையான வகையிலும், ஏன் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன என்று பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் எவ்வித ஒளிவுமறைவின்றி நேர்மையாகவும், உரிய வகையிலும், உறுதியாகவும், குற்றவியல் ஒழுக்கத்துடன் நடந்து கொள்வோம். முடிந்த அளவுக்கு நீதிமன்ற நடைமுறையை பயனுள்ளதாக்கவும், திறனுள்ளதாக்கவும் நாங்கள் உதவுவோம். பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், சந்தேகத்திற்குரிய நபர்கள் மற்றும் பிரதிவாதிகள் ஆகியோர் உள்ளிட்ட, எங்கள் முடிவுகளால் பாதிக்கபட்டவர்களை மதித்து அனைவரின் மனித உரிமைகளைப் பாதுகாப்போம்.

# அடிப்படை தர தகுதிநிலைகள்

வழக்குரைஞர்களாக, பொதுமக்கள் சார்பாக அதிகாரத்தை நாங்கள் பயன்படுத்துகிறோம். பொதுமக்கள் பார்வையில் உள்ள **அடிப்படை தர தகுதிநிலைகளுக்கு** இணங்க பொது சேவையை நாங்கள் வழங்குகிறோம், பொதுமக்கள் சார்பாக, வழக்கு தொடுப்போரிடமிருந்து எதிர்பார்க்கும் தரமான சேவையை இந்த அடிப்படை தர தகுதிநிலைகள் வழங்குகிறது. வழக்கு தொடுத்தல் சேவையை வழங்கும் அனைவருக்கும் இது பொருந்தும்.

உயர்ந்த தகுதிநிலையில் வழக்குரைஞர்களை தங்கள் கடமைகளை மேற்கொள்ள, அவர்களைச் சார்ந்திருக்கும் பாதிக்கப்பட்டோர்கள், சாட்சிகள், சந்தேகத்திற்குரிய நபர்கள் மற்றும் பிரதிவாதிகளுக்கு இந்தத் தகுதிநிலை முக்கியமானதாகும். காவலர்கள், நீதிமன்றங்கள் மற்றும் பிற குற்றவியல் நீதி முகமைகள் வழக்குரைஞர்களைச் சார்ந்திருப்பதால், பயனுள்ள திறமையான சேவையை வழங்க இந்தத் தரங்களை இவர்களும் புரிந்து கொள்ள வேண்டும். முக்கியமான பொதுமக்கள் சேவையை தேவைக்கேற்ப திறமையான முறையில் வழங்குவதை இந்தத் தகுதிநிலைகள் பிரதிபலிக்கின்றன எனும் உறுதியையும், அவ்வாறு வழங்கப்படும் சேவைக்கான முழு பொறுப்பு வழுக்குரைஞர்களுடையது எனும் உறுதியையும் பொதுமக்கள் மற்றும் வழக்குரைஞர்களைக் கண்காணிக்கும், தணிக்கையிடும், ஆய்வுசெய்வோருக்கு வழங்க வேண்டும்.

இந்தத் தகுதிநிலைகள் நல்ல நடைமுறை வழக்கத்தை உருவாக்குவதோடு, நமது சட்டபூர்வ மற்றும் தொழில்முறை கடப்பாடுகளைப் பிரதிபலிக்கிறது. குற்றவியல் செயல்முறை விதிகளுக்கு[1] நாங்கள் இணங்குகிறோம் என்பதை உறுதிசெய்யும் வகையில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. மற்ற வழக்குரைஞர்கள் மற்றும் குற்றவியல் நீதி பயிற்சி மேற்கொள்பவர்களை நாங்கள் ஆலோசித்தோம். எங்கள் சமூகப் பங்கேற்புக் குழுக்களின் கருத்துக்களையும் கேட்டுள்ளோம், இந்தத் தகுதிநிலைகள் அனைவருக்கும் கிடைப்பதற்கான வழிவகைகளையும் மேற்கொண்டு வருகிறோம், இதன் மூலம் எங்களைத் தொடர்பு கொள்ள வருவோர் மற்றும் தங்கள் வழக்குரைஞர்களின் செயல்திறமையின் மீது நம்பிக்கையை எதிர்பார்க்கும் பரவலான பொதுமக்களின் அனுபவத்தையும் பெறுவோம்.

பொது மக்களிடையே மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும் எங்கள் பணியின் முக்கியப் பகுதிகள் இந்தத் தகுதிநிலைகளில் வழங்கப்பட்டுள்ளன. நாங்கள் எங்கள் வழக்குப்பணிகளில் மேற்கொள்ளும் அனைத்து செயல்களின் நீண்ட பட்டியலாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இவை உருவாக்கப்படவில்லை. வழக்குரைஞர்கள் மேற்கொள்ளும் செயல்பாடுகளும், தரமான சேவையின் குறிப்பிட்ட சுருக்கமான கூற்றுகளும் இவற்றில் உள்ளன. வழக்குத் தொடுத்தல் சேவை மேற்கொள்ளும் அனைத்தும் தரத்தை மையமான நோக்காகக் கொண்டே செய்ய வேண்டும் என்பதை அவை பிரதிபலிக்கின்றன. அவற்றுடன் இணங்கிச் செயல்படும்போது, கூட்டு முகமைகள் மற்றும் பொதுமக்களிடம் பண்புடனும், மரியாதையுடனும், தொழில்முறையிலும் நாம் தொடர்புகொள்ள வேண்டும். பொதுமக்கள், குறிப்பாக வழக்குத் தொடுத்தல் சேவையுடன் தொடர்பு கொள்வோர், இந்தத் தகுதிநிலைகளை, நாங்கள் பிரசுரித்த செயல்திறன் தகவலுடன் பயன்படுத்தி, நாங்கள் எவ்வளவு திறமையாக செயல்படுகிறோம் என்று மதிப்பட எதிர்பார்க்கின்றோம்.

---

[1] வழக்குகளை, வழக்குத் தொடுப்போர் மற்றும் அதை எதிர்வாதம் செய்வோர் எவ்வாறு தயார் செய்ய வேண்டும் என்பதையும், வழக்குகளை நீதிமன்றம் எவ்வாறு நிர்வகிக்க வேண்டும் என்பதையும் கண்காணித்துவரும் தலைமை நீதிபதி (Lord Chief Justice) இந்த விதிகள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன. இவை நீதி அமைச்சக வலைத்தளத்திலோ (www.justice.gov.uk) அல்லது TSO ஆர்டர்ஸ்/போஸ்ட் கேஷ் டிப்பார்ட்மெண்ட், தி ஸ்டேஷனரி ஆஃபீஸ், PO பாக்ஸ் 29, நார்விச் இடம் கிடைக்கும். NR31GN.

எங்கள் பணியின் அனைத்து தன்மைகளையும் கவரும், மேலும் விரிவான ஆவணங்களுடன் இந்தத் தகுதிநிலைகள் கிடைக்கும். குறிப்பிட்ட வகையான குற்றங்களை எவ்வாறு அணுக வேண்டும் என்ற வழிகாட்டுதல் அந்த ஆவணங்களில் உள்ளன. பெரும்பாலான இந்த ஆவணங்கள் எங்கள் www.cps.gov.uk வலைத்தளத்தில் கிடைக்கும் அல்லது வேண்டுதலின் பேரில் வழங்கப்படும் (விவரங்களுக்கு பின் அட்டையைப் பார்க்கவும்).

தகுதிநிலைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஆவணங்களின் ரகசியத்தைப் பாதுகாக்க வழக்கு தொடுத்தல் சேவை கடமைப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்வது முக்கியம்; உதாரணத்திற்கு, தகுதிநிலை 2 -இல் வகுக்கப்பட்டுள்ள குற்றம் சுமத்தப்படுவது பற்றிய முடிவுகள் குறித்த குறிப்பேடுகள்.

பிரசுரிக்கப்பட்ட சேவை வழங்கல் நடவடிக்கைகளின் தொகுப்பும் இந்தத் தகுதிநிலைகளுக்கு உறுதுணையாக விளங்குகின்றன, ஒவ்வொரு தகுதிநிலையிலும் எதிர்பார்க்கப்படும் செயல்திறனை இவை நிர்ணயிக்கும். வழக்கு தொடுத்தல் சேவையால் குறிப்பிட்ட இடைவெளியில் முறையாக சேகரிக்கப்படும் செயல்திறன் தரவை இந்த நடவடிக்கைகள் பயன்படுத்துகின்றன. செயல்திறன் மதிப்பீடு துல்லியமாக வழங்கப்படுவதையும், குறைந்த செலவில் மேற்கொள்ளப்படுவதையும் உறுதிசெய்ய, எந்த ஒரு செயல்திறன் நடவடிக்கையும் கவனமாக மதிப்பீடு செய்யப்படும். இந்த நடவடிக்கைகளின் அடிப்படையில் எங்கள் செயல்திறனை பொதுமக்களுக்கு முறைப்படி அறிவிப்போம்.

வழக்கு தொடுத்தல் சேவைக்கு இந்தத் தகுதிநிலைகள் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. எங்கள் செயல்பாடுகளை ஒழுங்கமைப்பதிலும், எங்கள் பணிக்கு ஆதரவளிக்கும் அமைப்பு மற்றும் செயல்முறைகளை உருவாக்குவதிலும் எங்களுக்கு இவை வழிகாட்டுகின்றன. இவற்றில் விவரிக்கப்பட்டுள்ள சேவையை வழங்குவதில் நாங்கள் தோல்வியடைந்தால், அதற்கு முழு பொறுப்பாளிகளான எங்களை பொதுமக்கள் தட்டிக் கேட்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம், இதன் மூலம் இந்தத் தகுதிநிலைகளை ஒரே சீராக தொடர்ந்து வழங்குவதற்கான எங்கள் திறன்மூலம் வழக்குரைஞர்களாக நாங்கள் எங்கள் வெற்றியை மதிப்பீடு செய்வோம்.

இந்த ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள 12 தகுதிநிலைகள் ஒவ்வொன்றும் எங்கள் பணியின் குறிப்பிட்ட ஒரு பகுதியை விவரிக்கின்றது. இந்தத் தகுதிநிலைகளின் பட்டியல் 6 வது பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது. அவற்றின் உள்ளடக்கம், அதைத் தொடர்ந்து வரும் பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளது.

முக்கியமான தரச் சேவையை தொடர்ந்து விவரிப்பதை உறுதிப்படுத்த, இந்தத் தகுதிநிலைகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் நாங்கள் மதிப்பாய்வு செய்வோம். மற்ற பகுதிகளில் தகுதிநிலைகள் எதுவும் முக்கியமானதாக அடையாளம் காணப்படும்போது அவற்றையும் இதில் சேர்ப்போம்.

# அடிப்படை தர தகுதிநிலைகள்

**தகுதிநிலை 1:** குற்றங்களை திறமையான முறையில் கையாளவும், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த உதவவும், காவல்துறை மற்றும் பிற விசாரணையாளர்களுக்கு அறிவுரை வழங்குவோம்.

**தகுதிநிலை 2:** அரச வழக்குரைஞர்களுக்கான நெறிமுறைக்கு ஏற்ப, நேர காலத்துடன், திறமையான, நேர்மையான குற்றம் சுமத்துவது பற்றிய முடிவுகளை எடுப்போம்.

**தகுதிநிலை 3:** தேவை ஏற்படும்போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் இழப்பீடு கிடைக்கவும், குற்றவாளிகளுக்கு மறுவாழ்வளிக்கவோ அல்லது அவர்களைத் தண்டிக்கவோ, வழக்கு தொடுத்தலுக்கு மாற்றாக, நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் தீர்வு காண முனைவோம்.

**தகுதிநிலை 4:** பொருத்தமான நேரங்களில், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களைக் கருத்தில் கொண்டு, பிரதிவாதிகளுக்கான பிணையை எதிர்ப்போம்.

**தகுதிநிலை 5:** எங்களின் அனைத்து வழக்குகளையும் கால தாமதமின்றியும், குற்றவியல் செயல்முறை விதிகளுக்கு உட்பட்டும் தயாரிப்போம், இதன் மூலம் கிடைக்கும் வாய்ப்பில் கூடிய விரைவில் குற்றத்தை ஏற்கும் வழக்குரைகள் உள்ளிடப்படும், மற்றும் நேர்மையான வழக்கு விசாரணை திட்டமிட்ட தேதிகளில் நடைபெறும்.

**தகுதிநிலை 6:** எங்கள் வழக்குகளை நேர்மையாகவும், உறுதியாகவும் முன்னிலைப்படுத்துவோம்.

**தகுதிநிலை 7:** பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் தேவைகளை மதிப்பீடு செய்வோம், அவர்களின் வழக்கின் போக்கை அவ்வப்போது அவர்களுக்குத் தெரியப்படுத்துவோம், தங்களிடம் உள்ள சிறந்த தடையத்தை வழங்க அவர்களுக்கு உதவ தகுந்த ஆதரவை அவர்களிடம் கேட்போம்.

**தகுதிநிலை 8:** வழக்குகளை நிறுத்தும்போது அல்லது குற்றச்சாட்டைப் பெரிய அளவில் மாற்றும்போது, பாதிக்கப்பட்டவர்களிடம் எங்கள் முடிவுகளை விளக்குவோம்.

**தகுதிநிலை 9:** தீர்ப்பு வழங்கும் செயல்முறையில் நீதிமன்றத்திற்கு உதவியாக இருப்பதோடு, குற்றவாளி அல்லது குற்றத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முடக்குமாறு கோருவோம்.

**தகுதிநிலை 10:** நீதிமன்றம் தவறான சட்ட முடிவை எடுத்துள்ளது என்று நாங்கள் நம்பினால், மேல்முறையீடு செய்யும் எங்கள் உரிமையை பயன்படுத்துவது குறித்து நாங்கள் கருதுவோம்.

**தகுதிநிலை 11:** எங்கள் முடிவுகள் மற்றும் நாங்கள் வழங்கும் சேவை குறித்த புகார்களை உடனடியாகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்வோம்.

**தகுதிநிலை 12:** சமூகங்களுடன் தொடர்பிலேயே இருப்போம், இதனால் நாங்கள் முடிவெடுக்கும்போது அவர்களின் எண்ணத்தை நாங்கள் புரிந்து கொள்ள உதவும்.

# தகுதிநிலை 1

## குற்றங்களை திறமையான முறையில் கையாளவும், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த உதவவும், காவல்துறை மற்றும் பிற விசாரணையாளர்களுக்கு அறிவுரை வழங்குவோம்

1.1 சில சமயங்களில், சந்தேகத்திற்குரிய நபரை கைது செய்யத் தயாராவதற்கு முன்பு, காவல்துறை மற்றும் பிற விசாரணையாளர்கள் எங்களிடம் கேட்டால், நாங்கள் அறிவுரை வழங்குவோம். இவ்வாறு நடைபெறும் தருணங்கள்:

அ) சந்தேகத்திற்குரிய நபர்கள், பொதுமக்களுக்கு கடுமையான அபாயங்களை உண்டாக்கலாம் என்று நம்பப்படும் சூழல்கள்;

ஆ) நீதிமன்றத்தில் சாட்சியை எப்படி பயன்படுத்துவது என்பதை பாதிக்கும், முக்கியமான முடிவுகள் தேவைப்படும் சூழல்கள்;

இ) தொடரும் குற்றச்செயல்கள், அல்லது சமூக விரோத செயல்களின் மூலம் குறிப்பிட்ட சமூகம் அல்லது நபர்களின் ஒரு பிரிவினர் பாதிக்கப்படும் சூழல்; அல்லது

ஈ) கூட்டுப்பொறுப்பாகப் புரியப்பட்ட கொலை அல்லது தேர்தல் மோசடி போன்ற, வழக்கத்திற்கு மாறான அல்லது கூருணர்வுடைய குற்றச்செயல் புலனாய்வில் இருக்கும் சூழல்கள்.

1.2 ஒப்புக்கொள்ளப்பட்ட கால நேரத்தில், உயர்தர அறிவுரையை வழங்குவதே எங்கள் இலக்கு.

1.3 தகுந்த காரணங்களுடன், தேவைப்படும் இடங்களில் செயல் நிலைகளின் பட்டியலுடன் பேச்சு மூலம் அல்லது எழுத்துமூலம் உறுதிப்படுத்தப்பட்டு அறிவுரை வழங்கப்படும்.

1.4 பின்வருவனவற்றுக்கு நாங்கள் அறிவுரை வழங்குவோம்:

அ) தண்டனை வழங்கும் சாத்தியமுள்ள குற்றங்கள் அல்லது குற்றச்செயலை எதிர்கொள்ளும் பிற வழிகள், இதன் மூலம் முறையாகவும் திறமையுடனும் புலனாய்வு ஒருமுகப்படுத்தப்படும்;

ஆ) ஒரு வழக்கை முடிந்த அளவுக்கு உறுதியாக்குவதற்கு ஏற்ற விசாரணை வழிகள்;

இ) தடையத்தை சந்தேகத்திற்கு இடமின்றி ஏற்கத்தக்கதாக்க;

ஈ) நீதிமன்றத்தில் மிகச் சிறந்த வழியில் முன்னிலைப்படுத்துவதற்கு ஏதுவாக தடையங்களை எவ்வாறு சேகரிக்க வேண்டும்;

உ) நிபுணத்துவமுள்ள தடையத்திற்கான தேவையின் சாத்தியக்கூறுகள்;

ஊ) பயன்படுத்தாத பொருட்களை எப்படி ஒத்துப் பார்க்க வேண்டும்;

எ) சமூக விரோத செயல்பாடுகளுக்கெதிரான ஆணைகள், மற்றும் மனுவுக்கு ஆதரவளிக்கத் தேவைப்படும் தடையங்களை சேகரிப்பது போன்ற துணை

ஆணைகளை பிறரப்பிக்குமாறு நீதிமன்றத்திடம் கோருவதற்கான சாத்தியக் கூறுகள்;

ஏ) சாட்சிகளின் ஒத்துழைப்பை உத்தரவாதப்படுத்த அல்லது தடையத்தைப் பெறுவதற்கான நீதிமன்ற ஆணையைப் பாதுகாக்க அரச வழக்குரைஞரின் சம்மதம் தேவைப்படும் சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்துதல்;

ஐ) சந்தேகத்திற்குரிய நபரை நாடுகடத்தல்;

ஒ) சந்தேகத்திற்குரிய நபரின் சொத்துக்களை கட்டுப்படுத்தல்; மற்றும்

ஓ) தடையத்தை எப்படி வெளிநாட்டிலிருந்து பெறுதல்.

# தகுதிநிலை 2

**அரச வழக்குரைஞர்களுக்கான நெறிமுறைக்கு ஏற்ப, நேர காலத்துடன், திறமையான, நேர்மையான குற்றம் சுமத்துவது பற்றிய முடிவுகளை எடுப்போம்.[2]**

2.1 மிகவும் பாரதூரமான அல்லது சிக்கலான வழக்குகளில், சந்தேகத்திற்குரிய நபரின் மீது குற்றம் சாட்டுவதா அல்லது வேண்டாமா என்பது பற்றி நாங்கள் முடிவெடுப்போம். முடிவெடுக்குபோது, அரச வழக்குரைஞர்களுக்கான நெறிமுறை ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள பரிசோதனை முறைகளையும், வழிகாட்டுதலையும் நாங்கள் பயன்படுத்துவோம். காவலர்கள் மற்றும் வழக்குத் தொடுநர்கள் பின்பற்றும் விரிவான செயல்முறைகள் பற்றி தி டைரக்டர்ஸ் கைடன்ஸ் ஆன் சார்ஜிங் (The Director's Guidance on Charging)[3] -இல் விளக்கப்பட்டுள்ளன.

2.2 ஒப்புக்கொள்ளப்பட்ட கால நேரத்தில், எங்கள் முடிவுகளை எடுத்து, காவல்துறை அல்லது மற்ற விசாரணையாளர்களிடம் தெரிவிப்பதே எங்கள் நோக்கம்.

2.3 குற்றச்சாட்டு முடிவுக்கான காரணங்கள், தனது வழக்கை நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தல் சேவை எப்படி வழங்கும், மற்றும் எத்தனை பலவீனங்கள் அல்லது எதிர்வாதங்கள் கையாளப்படுகின்றன போன்ற விவரங்களைப் பதிவு செய்வோம். பின்வருவனவற்றையும் சேர்த்து, தேவைப்படும் அடுத்தகட்ட பணிகளுக்கும் நாங்கள் தயாராவோம்:

அ) வழக்கைப் பலப்படுத்த அல்லது சமூக விரோத செயல்பாடுகளுக்கெதிரான ஆணைகள் அல்லது கட்டுப்படுத்தல் ஆணைகள் போன்ற துணை ஆணைகளுக்குத் தேவைப்படும் மனுக்களுக்கு உதவியாக என்னென்ன கூடுதல் தடையங்களைப் பெற வேண்டும்;

ஆ) பிரதிவாதியின் சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கு ஏதுவாக வழக்கு உள்ளதா என்று அறிதல், இதன் மூலம் சரியான நேரத்தில் காவலர்கள் தேவையான பணிகளை மேற்கொள்ளத் தொடங்குவர்;

இ) சாட்சிகளின் தேவையில்லாத வருகையைத் தவிர்க்க, பிரதிவாத வழக்குரைஞரால் ஒப்புக்கொள்ளப்பட்ட எந்த தடையத்தை, நீதிமன்றத்தில் உள்ள வழக்குரைஞர் கேட்க வேண்டும்;

ஈ) சாட்சிகளுக்கு ஏதும் குறிப்பிட்ட தேவை உள்ளதா என்று கண்டறிதல் மற்றும், அதுகுறித்து ஏற்கனவே அறிந்திருந்தால், தாக்குதல் அல்லது மிரட்டலுக்கு உட்படக்கூடிய சாட்சிகள், தங்கள் தடையங்களை திறன்பட வழங்கத் தேவைப்படும் சிறப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கி, அவற்றை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பது குறித்த சுருக்கமான விவரம் தயார் செய்தல்;

உ) தான் குற்றவாளி அல்ல என்று நீதிமன்றத்தில் பிரதிவாதி வாதிடும் சூழல்களில், நீதிமன்ற அனுமதியுடன் பயன்படுத்த வேண்டிய தடையங்கள் என்னென்ன

---

[2] எங்கள் வலைத்தளத்தில் (www.cps.gov.uk) கிடைக்கும் அல்லது வேண்டுதலின் பேரில் வழங்கப்படும் (விவரங்களுக்கு பின் அட்டையைப் பார்க்கவும்).

[3] எங்கள் வலைத்தளத்தில் (www.cps.gov.uk) (கிடைக்கும் அல்லது வேண்டுதலின் பேரில் வழங்கப்படும் விவரங்களுக்கு பின் அட்டையைப் பார்க்கவும்).

(உதாரணத்திற்கு, ஒழுங்கீனம் குறித்த தடையம் அல்லது செவிவழிச் செய்தித் தடையம் போன்றவை) என்பது குறித்த விவரங்கள்; மற்றும்

ஊ) பயன்படுத்தாத பொருட்களின் பட்டியலில் தயாராக உள்ள எந்த விவரத்தைச் சேர்க்கவேண்டும் என்பது குறித்த தகவல்.

2.4 ஒரு சாட்சியின் தடையத்தின் நம்பகத்தன்மையை மதிப்பீடு செய்வது உதவிகரமாக இருக்கும் அல்லது சிக்கலான தடையத்தைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும் எனக் கருதப்படும் பட்சத்தில், அதனுடன் தொடர்புடைய நடைமுறை நெறிமுறைக்கிணங்க ஒரு சரியான பயிற்சி பெற்ற மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வழக்குத் தொடுநர் சாட்சியுடன் வழக்கிற்கு முந்தைய ஒரு நேர்காணலை மேற்கொள்ளலாம்.

2.5 இவற்றையும் செய்வோம்:

அ) பிணை மறுக்கப்பட வேண்டுமா என்பது குறித்தும் ஆராய்வோம், மறுக்கப்பட வேண்டுமென்றால், அதற்கான காரணங்கள், அல்லது, பொருந்தினால், என்ன நிபந்தனை விதிக்க வேண்டும் என்று நீதிமன்றத்திடம் வழக்குரைஞர் தெரிவிக்க வேண்டிய விவரங்களைச் எடுத்துரைத்தல்;

ஆ) வழக்கு தொடுத்தல் சேவையின் ஆட்சேபனைக்குப் பிறகும் பிணை வழங்கப்பட்டால், அதை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் உரிமை உள்ளதா என்றும் அதை வழக்குரைஞர் பயன்படுத்த வேண்டுமா என்று சுட்டிக்காட்டுதல்;

இ) நீதவான்கள் கையாளும் அளவுக்கு வழக்கு ஏற்புடையதாக உள்ளதா அல்லது, அரச நீதிமன்றத்திடம் ஒப்படைக்குமாறு நீதவான்களை வழக்குரைஞர்கள் கேட்டுக்கொள்ளும் அளவுக்கு மிகவும் பாரதூரமான வழக்கா என்று அடையாளம் காணுதல்;

ஈ) குற்றத்தை ஏற்கும், ஏற்புடைய மாற்று வழக்குரையை, அல்லது அதற்கான அடிப்படையைச் சுருக்கமாக விவரித்தல். அதே சமயம் நீதிமன்றம் குற்றத்தின் தீவிரத்தன்மைக்கு ஏற்ப, குறிப்பாக மோசமான அம்சங்கள் காணப்படுமிடத்து, தீர்ப்பு வழங்கலாமென்பதை உறுதியாகக் கருத்தில் கொள்ளுதல்; மற்றும்

உ) பிரதிவாதிக்கு தண்டனை வழங்குவதுடன் சேர்த்து, நீதிமன்றம் வழங்க வேண்டும் என்று வழக்குரைஞர்கள் கேட்க வேண்டிய கூடுதல் ஆணைகள் உள்ளனவா என்று அடையாளம் காணுதல்.

2.6 குற்றம் சாட்ட வேண்டாம் என்று முடிவெடுக்கப்பட்டால், குற்றத்தின் எந்த கூறுகள் நிரூபிக்க முடியாது, அதற்கான காரணங்கள், அல்லது, பொருந்தினால், பொது நலன் கருத்தில் வழக்கு தொடுத்தல் சேவை ஏன் தேவைப்படாது என்று வழக்குரைஞர் சுருக்கமாகக் கூறுதல்.

## தகுதிநிலை 3

**தேவை ஏற்படும்போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் இழப்பீடு கிடைக்கவும், குற்றவாளிகளுக்கு மறுவாழ்வளிக்கவோ அல்லது அவர்களைத் தண்டிக்கவோ, வழக்கு தொடுத்தலுக்கு மாற்றாக, நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் தீர்வு காண முனைவோம்.**

3.1 வழக்கின் குற்றச்சாட்டை மெய்ப்பிக்க போதுமான தடையம் இருந்து ஒரு முடிவெடுக்கப்பட்டபின், வழக்கின் குற்றச்சாட்டுக்கு மாற்றாக, குற்றச்செயலின் தீவிரம் மற்றும் விளைவுக்குத் தகுந்த, மறுவாழ்வு, இழப்பீடு அல்லது தண்டனைத் தீர்வை நோக்கிய, நீதிமன்ற தலையீடு இல்லாத தீர்வு உள்ளதா என்று கருத வேண்டும்.

3.2 காவல்துறை மற்றும் பிற விசாரணையாளர்கள், நீதிமன்ற தலையீடு இல்லாமல் தங்கள் நிர்வாகத்திலேயே தீர்வு காணும் சூழல்களில், மிகத் தீவரமான குற்றத்திற்கு, குற்றம் சாட்டப்பட்டால், அரச நீதிமன்றத்தில் மட்டுமே அதை கையாளும் அளவுக்கு அந்தக் குற்றம் இருந்தால், குற்றம் புரிந்தவருக்கு ஒரு சாதாரண எச்சரிக்கை[4] வழங்குவதற்கு முன், வழக்குத் தொடுநரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். விதிவிலக்கு உள்ள சூழ்நிலைகளில் மட்டுமே இந்த குற்றங்களுக்கு எச்சரிக்கைகளை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். குற்றவாளி தனது குற்றத்தை தெளிவாக ஒப்புக்கொண்டாலோ அல்லது உணர்ந்தாலோ, ஒரு சாதாரண எச்சரிக்கை வழங்குமாறு காவலர்களை நாங்கள் அறிவுறுத்துவோம், உதாரணத்திற்கு ஒழுங்கீனத்திற்கான அபராத அறிக்கை. இருப்பினும் ஒரு ஒழுங்கீனத்திற்கான அபராத அறிக்கை வழங்குதல் என்பது காவலர்களின் முடிவாகும்.

3.3 நிபந்தனை எச்சரிக்கை வழங்குவதற்கு முன் காவல்துறை மற்றும் பிற விசாரணையாளர்கள் வழக்குத் தொடுநரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். நிபந்தனை எச்சரிக்கையில், குற்றம் புரிந்தவர் கீழ்ப்பணிந்து நடக்க வேண்டிய நிபந்தனைகளை நாங்கள் அமைப்போம்.

3.4 சாதாரண எச்சரிக்கை அல்லது நிபந்தனை எச்சரிக்கை ஆகியவற்றில் எதை வழங்குவது என்று முடிவெடுக்கும்போது, அரச வழக்குத் தொடுநர்களுக்கான நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ள பொதுமக்கள் நலனை நாங்கள் கருத்தில் எடுப்போம், குறிப்பாக பாதிக்கப்பட்டவர்களின் கருத்துகள், மற்றும் நிபந்தனைக்குட்பட்ட எச்சரிக்கை பற்றிய இயக்குநரின் வழிகாட்டுதல்கள் மற்றும் சார்புடைய ஹோம் ஆபீஸ் சுற்றறிக்கைகளையும் கணக்கில் எடுப்போம்.

3.5 நிபந்தனைக்குட்பட்ட எச்சரிக்கை வழங்குவது பற்றி முடிவெடுக்கும்போது, பின்வருவனவற்றையும் நாங்கள் கணக்கில் எடுப்போம்:

அ) குற்றம்புரிந்தவரை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்வதற்குப் பதில், தனது செயலுக்குப் பரிகாரம் செய்யும் வாய்ப்புகள் அவருக்கு உள்ளனவா என்பது.

[4] இளம் வயது குற்றவாளிகளுக்கு சாதாரண எச்சரிக்கை வழங்கக் கூடாது. இருப்பினும், அவர்களுக்கு, கண்டனம் அல்லது இறுதி எச்சரிக்கை வழங்கலாம். எங்கள் வசதிக்காக, தண்டனைகளையும் குறிக்க, எச்சரிக்கை என்ற சொல்லை இந்தத் தகுதிநிலைகளில் பயன்படுத்துகிறோம். இளம் வயது குற்றவாளிகளுக்கு நிபந்தனையின் பேரில் எச்சரிக்கை வழங்கலாம்.

உதாரணத்திற்கு, சீர்படுத்துவதற்கான இழப்பீட்டுத் தொகை, அல்லது பாதிக்கப்பட்டவருக்கு நஷ்ட ஈடு வழங்குதல்;

ஆ) தங்கள் குற்றச்செயலுக்கான அடிப்படை காரணத்தைக் கண்டறிந்து (மது அல்லது போதைப் பொருட்களின் தவறான பயன்பாடு) அவற்றை எதிர்கொள்வதற்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள் தேவையா என்பது குறித்து அறிதல், இதன் மூலம் குற்றச்செயல் புரிவதிலிருந்து அவர்களைத் தடுக்கலாம்;

இ) சந்தேகத்திற்குரிய நபர், பாதிக்கப்பட்டவர் அல்லது சமூகத்தின் நலனுக்கு உகந்ததா என்று அறிதல்; மற்றும்

ஈ) குற்றம் புரிந்தவர் தண்டனைத் தொகை ஏதும் கட்ட வேண்டுமா அல்லது ஊதியம் இல்லாத பணியைச் செய்ய வேண்டுமா என்று அறிதல்.

3.6 வன்முறைக் குற்றம் ஒன்றைப் பொறுத்தவரை, அவ்விடயம் சிறு குற்றமாக, குற்றம் சுமத்தப்பட்டால் நீதவான் நீதிமன்றத்தாலேயே விசாரிக்கப்படக்;கூடியதொன்றாக இருந்தாலொழிய, அக்குற்றத்துக்கு நிபந்தனையுடன் கூடிய எச்சரிக்கை அங்கீகரிப்படலாகாது.

3.7 சந்தேகத்திற்குரிய நபர், சாதாரண எச்சரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலோ அல்லது நிபந்தனைக்குட்ட எச்சரிக்கை அளிக்கப்படும் சூழலில் அதன் நிபந்தனைகளை ஏற்காமல் குற்றச்செயலை ஒப்புக்கொள்ளாமல் இருக்கும் சூழ்நிலைகளில், அவன் அல்லது அவள் செய்த அசல் குற்றச் செயலின் மீது வழக்கு தொடர வேண்டும்.

3.8 நீதிமன்றத் தலையீடு இல்லாத தீர்வின் விதிகளுக்கு குற்றச்செயல் புரிந்தவர் கட்டுப்பட மறுத்தால், நாங்கள் பொது நலனையிட்டு மீள ஆராய்ந்து அவன் அல்லது அவள் மீது குற்றம் சுமத்துவதா என்று முடிவெடுப்போம். அசல் குற்றத்துக்கெதிராக வழக்குத் தொடுப்பதே வழமையாக இருக்கும்.

3.9 குற்றவாளி மீது எதிர்காலத்தில் மேலும் குற்றமிழைத்தமைக்காகக் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டால், அவருக்கு வழங்கப்பட்ட சாதாரண எச்சரிக்கைகள் மற்றும் நிபந்தனைக்குட்பட்ட எச்சரிக்கைகள் குறித்து நீதிமன்றத்தின் பார்வைக்கு கொண்டுவருவோம்.

# தகுதிநிலை 4

## பொருத்தமான நேரங்களில், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களைக் கருத்தில் கொண்டு, பிரதிவாதிகளுக்கான பிணையை எதிர்ப்போம்

4.1 ஒன்று அல்லது மேற்பட்ட காரணங்களுக்காக பிணை மனுவை நிராகரிக்கும் சூழ்நிலைகள் உருவாகாத வரை, பொதுவாக அனைத்து பிரதிவாதிகளுக்கும் பிணை மனு அளிக்கும் உரிமை உண்டு[5].

4.2 ஒவ்வொரு வழக்கு விசாரணையின்போதும், பிணையை மறுப்பதற்கு ஏதும் காரணங்கள் உள்ளனவா , அல்லது பிரதிவாதியின் பிணையின் மீது நிபந்தனைகள் விதிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தைக் கோருவதா என்று வழக்குரைஞர் ஆராய்வார்.

4.3 இந்த முடிவை எடுக்கும்போது, பின்வருவனவற்றை நாங்கள் கணக்கில் எடுத்துக் கொள்வோம்:

அ) சில வரையறுக்கப்பட்ட எண்ணிக்கைக் குற்றங்களைப் பொறுத்தவரை, பிரதிவாதியைப் பிணையில் விடுவிப்பற்கு விதிவிலக்கான சூழ்நிலைகள் இருத்தல் வேண்டும். புரியப்பட்ட குற்றம் அவற்றில் ஒன்றா என்பது;

ஆ) பிரதிவாதிக்கு எதிராக உள்ள தடையத்தின் தன்மை மற்றும் வலிமை;

இ) அவன் அல்லது அவள் மீது சாட்டப்பட்ட குற்றத்தின் தீவிரத்தன்மை;

ஈ) பிரதிவாதியின் முந்தைய குற்றத் தீர்ப்புகள், அவன் அல்லது அவள் பிணைக்கு எந்த அளவுக்கு கட்டுப்பட்டார் என்பது பற்றிய வரலாறும் இதில் அடங்கும்;

உ) மற்ற குற்றச்செயல்களுக்காக ஏற்கனவே பிணையில் பிரதிவாதி உள்ளாரா;

ஊ) இது போன்ற புகார்கள் ஏற்கனவே அவர் மீது இருந்தனவா என்ற வரலாறு;

எ) சாட்சி அல்லது தடையத்தை குறுக்கீடு செய்யும் வகையில் பிரதிவாதி நடந்துகொள்ளும் சாத்தியம் பற்றிய தகவல்கள்;

ஏ) பிரதிவாதி பற்றி அறியப்படும் வேறு தகவல்கள், காவல் நிலைய போதைப் பொருள் சோதனை முடிவுகள் போன்றவை.

4.4 விசாரணையின்போது, பிணையை நாங்கள் எதிர்ப்பதற்கான, அல்லது நிபந்தனைகளை விதிக்கக் கோருவதற்கான குறிப்பிட்ட காரணங்களை வழக்குரைஞர் விவரித்து, ஒவ்வொரு காரணத்துக்கும் ஆதாரமாக கிடைத்துள்ள தகவல்களை முன்வைப்பார். அவற்றில் பிரதிவாதி பிணையில் விடுவிக்கப்படுவதால் பாதிக்கப்படட்டவருக்கு ஏற்படக்கூடிய கவலையும் அடங்கும்.

---

[5] பிரதிவாதிக்கு பிணை வழங்கப்படும் சூழலில், பின்வரும் மூன்று விதமான செயல்களில் பிரதிவாதி ஈடுபடக்கூடும் என்று பெருமளவு நம்பப்படுகிறது: சிறைக்காவலில் சரணடைய மறுத்தல்; பிணையில் இருக்கும் போது குற்றச்செயல் புரிதல்; அல்லது தானாகவோ அல்லது வேறொரு நபர் மூலமாகவோ சாட்சிகளிடம் தொடர்பு கொள்ளுதல் அல்லது நீதியின் போக்கில் இடையூறு செய்தல்.

4.5 பிணை வழங்கப்பட்டதை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் உரிமை வழக்குத் தொடுநருக்கு இருக்கும் விடயங்களில் (சிறைத் தண்டனை அளிக்கப்படும் அளவுக்கு சாத்தியக்கூறுகள் இங்கே தான் உள்ளன), மாஜிஸ்திரேட்கள் பிணை வழங்கும்பட்சத்தில், பாதிக்கப்பட்டவர் அல்லது பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்ற காரணம் அந்த மேல்முறையீட்டை நியாயப்படுத்துகிறதா என்பதுபற்றி நாங்கள் முன்கூட்டியே ஆராய்ந்து முடிவெடுப்போம். மாஜிஸ்திரேட் பிணை வழங்கும் சூழலில், அதை எதிர்த்து மேல்முறையீடு செய்வதே சரியானது என்று நாங்கள் முடிவெடுக்கும்போது, நாங்கள் மேல்முறையீடு செய்ய விரும்புகிறோம் என்று நீதிமன்றத்திற்கு உடனடியாக ஒரு அறிக்கையை வழக்குரைஞர் அளிப்பார், இதன்மூலம் எங்கள் மேல்முறையீட்டு விண்ணப்பம் விசாரணைக்கு வரும் வரை பிரதிவாதி காவலில் வைத்திருக்கப்படலாம்.

4.6 மாஜிஸ்திரேட்களின் பிணை நிராகரிப்பு அல்லது பிணை நிபந்தனைகள் விதிப்பை எதிர்த்து நீதிபதியிடம் மேல்முறையீடு செய்யும் உரிமை பிரதிவாதிகளுக்கு உண்டு. அவ்வாறு பிணை வழங்க அல்லது நடப்பு நிபந்தனைகளில் மாற்றங்களைச் செய்ய நீதிபதி முன்வந்தால், அந்த விண்ணப்பத்தை எதிர்க்க அல்லது தகுந்த நிபந்தனைகளை விதந்துரைக்க, அப்படிப்பட்ட மேல்முறையீட்டு விசாரணையில் நாங்கள் கலந்து கொள்வோம்.

4.7 பிணை நிபந்தனைகளை மீறியதற்காக நீதிமன்றத்திற்கு ஒரு பிரதிவாதி மீண்டும் அழைத்து வரப்படும்போது, அல்லது காவல்துறை அதிகாரி ஒருவருக்கு, அவர் பிணை நிபந்தனைகளை மீறும் சாத்தியம் இருப்பதாகத் தோன்றும்போது, அவருடைய பிணை வழங்கலைத் திரும்பப் பெறுவது அல்லது நிபந்தனைகளை மாற்றுவது குறித்து மாஜிஸ்திரேட்களிடம் வழக்குரைஞர் முறையீடு செய்வார்.

4.8 பிணை வழங்கலை நாங்கள் எதிர்த்தோமா என்பது பற்றியும், அப்படி இருந்தால், பிணை வழங்கல் எதிர்ப்பு அல்லது நிபந்தனைகள் வழங்குவதற்காக நாங்கள் முன்வைத்த காரணங்கள், மற்றும் அவற்றைப் பற்றி பிரதி வழக்குரைஞர் முன்வைத்த பணிந்துரைப்புக்கள் போன்ற விவரங்களை வழக்கு தொடர்பான கோப்பில் மிக விரிவான குறிப்புகளை வழக்குரைஞர் எழுதி வைப்பார். பிணை வழங்கலை அனுமதிப்பதை அல்லது ஏதேனும் பிணை நிபந்தனைகளைத் தளர்த்துவதை நியாயப்படுத்தும் சூழ்நிலை மாற்றங்கள் ஏதும் இருப்பதாகப் பின்னர் எழக்கூடிய கருத்துகளை எதிர்நோக்கவும், குற்றங்களுக்கான மறுப்புரை வைக்கப்படும் சூழல்களைக் கண்டுகொள்ளவும் எங்களுக்கு உதவும்.

# தகுதிநிலை 5

## எங்களின் அனைத்து வழக்குகளையும் கால தாமதமின்றியும், குற்றவியல் செயல்முறை விதிகளுக்கு[6] உட்பட்டும் தயாரிப்போம், இதன் மூலம் கிடைக்கும் வாய்ப்பில் கூடிய விரைவில் குற்றத்தை ஏற்கும் வழக்குரைகள் உள்ளிடப்படும், மற்றும் நேர்மையான வழக்கு விசாரணை திட்டமிட்ட தேதிகளில் நடைபெறும்

**நீதவான் (மாஜிஸ்டிரேட்) நீதிமன்றத்தில் ஒரு வழக்கின் முதல் விசாரணை**

5.1 அனைத்து பிரதிவாதிகளும் நீதவான் நீதிமன்றத்தில் தங்கள் முதல் நீதிமன்ற வருகையை மேற்கொள்ள வேண்டும்.

5.2 முதல் விசாரணைக்கு வழக்குரைஞர்கள் பின்வருமாறு தயார்செய்வர்:

அ) குற்றச்சாட்டு முடிவு, வழிகாட்டுதல்கள் மற்றும் வழக்கை மேலும் மதிப்பாய்வு செய்யும் தேவை உள்ளதா என்பதை கருத்தில் கொள்ளுதல்;

ஆ) வழக்கு காவல் துறையால் தொடரப்பட்டிருந்தால், அந்த குற்றச்சாட்டுகள் பொருத்தமானவை என்றும் அவற்றை நிரூபிக்க முடியும் என்றும் , பொதுமக்கள் நலனுக்காக வழக்கு தொடரப்படவேண்டும் என்றும் திருப்திகொள்ளல்;

இ) காவல்துறையால் பிணை மறுக்கப்பட்டிருந்தால், பிரதிவாதியை விளக்க மறியலில் வைக்குமாறு கோருவதா அல்லது பிரதிவாதியின் பிணையத்துடன் தகுந்த நிபந்தனைகள் விதிக்குமாறு கோருவதா என்று தீர்மானித்தல்;

ஈ) பிணையை எதிர்த்தல் அல்லது பிணை நிபந்தனைகள் விதிப்பது தொடர்பாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டிய கூற்றுக்களைத் தயார் செய்தல்; மற்றும்

உ) வழக்கின் குற்றச்சாட்டு குறித்த ஆரம்பகட்ட விவரங்களை பிரதிவாதி தரப்பு மற்றும் நீதிமன்றம் பெற்றதை உறுதிப்படுத்தல் போன்று, வழக்கில் முன்னேற்றத்தை ஏற்படுத்தல் மற்றும் தேவையற்ற ஒத்திவைப்புகளை தவிர்த்தல் போன்றவற்றை உறுதிப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

5.3 நீதிமன்றம் துவங்குவதற்கு முன் கிடைக்கும் நேரத்தில், நீதிமன்றத்தின் சட்ட ஆலோசகர், பிரதிவாதி வழக்குரைஞர்கள் மற்றும் நன்னடத்தைச் சேவை அல்லது இளைஞர் குற்றச்செயல் சேவை அதிகாரிகளைச் சந்திக்க வழக்குரைஞர்கள் நேரம் ஒதுக்க வேண்டும். இதன் மூலம், குற்ற ஏற்பு வழக்குரை நிகழக்கூடிய வழக்குகளை இனம் கண்டு, , குற்றச்செயல் புரிந்தவரை மீண்டும் ஒரு நாளில் ஆஜர்படுத்தாமல்

---

[6] வழக்குகளை, வழக்குத் தொடுப்போர் மற்றும் அதை எதிர்வாதம் செய்வோர் எவ்வாறு தயார் செய்ய வேண்டும் என்பதையும், வழக்குகளை நீதிமன்றம் எவ்வாறு நிர்வகிக்க வேண்டும் என்பதையும் கண்காணித்துவரும் தலைமை நீதிபதியால் (Lord Chief Justice) இந்த விதிகள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன. இவை நீதி அமைச்சக வலைத்தளத்திலோ (www.justice.gov.uk) அல்லது TSO ஆர்டர்ஸ்/போஸ்ட் கேஷ் டிப்பார்ட்மெண்ட், தி ஸ்டேஷனரி ஆஃபீஸ், PO பாக்ஸ் 29, நார்விச் இடம் கிடைக்கும்.
NR31GN.

நீதிமன்றம் அவருக்கு அதே நாளில் தண்டனை வழங்குவதற்கு ஏதுவாக, தண்டனை அறிவிப்புகளை முன்கூட்டிய தயார்செய்யலாம்.

5.4 பிரதிவாதி குற்றத்தை ஒப்புக்கொண்டால், வழக்குரைஞர் செய்வன:

அ) பொருந்தும் இடங்களில், காட்சிவழியில் பதிவுசெய்யப்பட்ட ஆதாரங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவரின் தனிப்பட்ட அறிக்கை ஆகியவற்றையும் சேர்த்து, வழக்கின் நிகழ்வுகளை மாஜிஸ்திரேட்களிடம் விவரிப்பார், இதன் மூலம் குற்றச்செயலின் தீவிரத்தன்மையை முழுமையாகப் பிரதிபலிக்கும் தண்டனையை அவர்கள் வழங்கலாம்;

ஆ) குற்றச்செயல் புரிந்தவருக்கு எதிராக வழங்கப்பட்ட முந்தைய தீர்ப்புகள், மற்றும், பொருந்தும் இடங்களில், சாதாரண எச்சரிக்கைகள் மற்றும் நிபந்தனை எச்சரிக்கைகள் ஏதும் இருந்தால் அவற்றின் மீது கவனத்தை ஈர்ப்பார்[7];

இ) சட்டப்படி தன்னால் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்ப்பு அல்லது ஆணையை உள்ளடக்கி, தண்டனை வழங்கும் தனது அதிகாரங்களை நீதிமன்றம் அறிந்திருப்பதை உறுதிப்படுத்தல்; மற்றும்

ஈ) எதிர்காலத்தில் மீண்டும் குற்றம் புரியக்கூடிய அளவுக்கு உள்ள குற்றவாளியின் திறனைத் தடுப்பதற்கு, நஷ்ட ஈடு அல்லது சமூக விரோத செயல்பாடுகளுக்கெதிரான ஆணைகள் அல்லது கட்டுப்படுத்தல் ஆணைகள் போன்ற தகுந்த துணை ஆணைகளைக் கருத்தில் கொள்ளுமாறு நீதிமன்றத்திடம் கேட்பது. தண்டனை வழங்குதல் செயல்பாட்டில் வழக்குரைஞரின் பங்கு பற்றி தகுதிநிலை 9 -இல் மேலதிக விவரங்களை அளித்துள்ளோம்.

5.5 (தாங்கள் வழங்கும் அதிகபட்ச தண்டனை போதுமான அளவுக்கு இல்லை என்று நீதவான்கள் (மாஜிஸ்திரேட்கள) கருதியதால்), தண்டனை வழங்கும் பொறுப்பை அரச நீதிமன்றத்திடம் மாஜிஸ்திரேட்கள் ஒப்படைக்கும்போது, தடையங்களின் நகல்கள் மற்றும் பிரதிவாதிக்கு எதிரான தீர்ப்புகள், சாதாரண எச்சரிக்கைகள் அல்லது நிபந்தனை எச்சரிக்கைகளை அரச நீதிமன்றத்திற்கு நாங்கள் அனுப்புவோம், இதன் மூலம் தண்டனை வழங்கும் விசாரணைக்கு நீதிபதி தயாராவார்.

5.6 குற்றத்தை ஒப்புக்கொள்ள தான் விரும்பவில்லை என்று குற்றவாளி குறிப்பிடும்பட்சத்தில், நீதவான் நீதிமன்றம் அல்லது அரச நீதிமன்றத்தில் எடுக்கொள்ளக்கூடிய வகையில் அந்த வழக்கின் தன்மை இருந்தால், வழக்கை நீதவான நீதிமன்றமே கையாளலாமென வழக்குத்தொடுநர் கருதுகிறாரா அல்லது அது அவ்வளவு தீவிரமானதாக இருப்பதால் அது அரச நீதிமன்றத்திடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்படவேண்டும் என்று கருதுகிறாரா என்று வழக்குரைஞர் நீதமன்றத்திடம் தெரிவிப்பார்.

---

[7] வழக்குகளை, வழக்குத் தொடுப்போர் மற்றும் அதை எதிர்வாதம் செய்வோர் எவ்வாறு தயார் செய்ய வேண்டும் என்பதையும், வழக்குகளை நீதிமன்றம் எவ்வாறு நிர்வகிக்க வேண்டும் என்பதையும் கண்காணித்துவரும் தலைமை நீதிபதியால் (Lord Chief Justice) இந்த விதிகள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன. இவை நீதி அமைச்சக வலைத்தளத்திலோ (www.justice.gov.uk) அல்லது TSO ஆர்டர்ஸ்/போஸ்ட் கேஷ் டிப்பார்ட்மெண்ட், தி ஸ்டேஷனரி ஆஃபீஸ், PO பாக்ஸ் 29, நார்விச் இடம் கிடைக்கும்.
NR31GN.

5.7 வழக்கு, நீதவான் நீதிமன்றத்தில் நடைபெறுவதாக இருந்தால், வழக்குரைஞர் செய்வன:

அ) தொடர்புடைய சாட்சி நீதிமன்றத்திற்கு வராமலேயே, எந்தெந்த தடையங்களை ஒப்புக் கொள்ளலாம் என்று பிரதிவாதி வழக்குரைஞரிடம் விவாதித்தல்;

ஆ) விசாரணை மேற்கொள்ள எழுவினாக்களை நீதிமன்றம் அடையாளம் காண உதவுதல்;

இ) வழக்கு தொடுத்தவரின் சாட்சிகள் ஆஜராவதற்கு சிரமமுள்ள விசாரணை தேதிகளை நீதிமன்றம் அறிந்திருத்தலை உறுதிசெய்தல்;

ஈ) தங்கள் தடையத்தை திறம்பட வழங்க சாட்சிகளுக்கு உதவ சிறப்பு நடவடிக்கைகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் ஒழுங்கீன குற்றத் தடையம் அல்லது செவிவழி குற்றத் தடையங்களைப் பயன்படுத்துவதற்கான அறிக்கைகள் உட்பட, விசாரணைக்கு தயார்படுத்துவதற்கான அட்டவணை குறித்த வழிகாட்டுதல்களை வழங்குமாறு நீதிமன்றத்திடம் கேட்டல்; மற்றும்

உ) விசாரணைக்கு தயார்நிலையில் இருக்க, மேலும் என்னென்ன பணிகளை வழக்கு தொடுப்போர் செய்ய வேண்டும், அவற்றை எவ்வளவு காலத்தில் முடிக்க வேண்டும் போன்ற விவரங்களை கோப்புகளில் பதிவு செய்தல்.

5.8 ஒரு வழக்கு அரச நீதிமன்றத்திடம்[8] ஒப்படைக்கப்பட்டாலோ, அல்லது அந்த வழக்கின் தீவிரத்தன்மையை அறிந்து, அது அரச நீதிமன்றத்தில் நடைபெற வேண்டும் என்று மாஜிஸ்திரேட்கள் முடிவெடுத்தாலோ, அல்லது அரச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்று பிரதிவாதி தேர்ந்தெடுக்கும் அனுமதி உள்ள ஒரு வழக்கில் பிரதிவாதி அவ்வாறு தேர்ந்தெடுத்தாலோ, அடுத்த விசாரணைக்கு முன் பணியை முடிக்க எங்களுக்கும், காவல்துறை அல்லது பிற விசாரணையாளர்களுக்கு எவ்வளவு காலம் தேவைப்படும் என்று கணக்கிட்டு, அடுத்த விசாரணைக்கு ஒரு தேதி குறிப்பதில் மாஜிஸ்திரேட்களுக்கு நாங்கள் உதவுவோம்.

**விசாரணைகள் அல்லது நீதவான் நீதிமன்றங்களில் ஒப்படைப்பு செயல்பாடுகள் மற்றும் அரச நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் முதல் விசாரணைக்குத் தயார்படுத்தல்**

5.9 நீதவான் நீதிமன்றத்தில் தான் குற்றவாளி அல்ல என்று பிரதிவாதி கோரியவுடனோ, ஒப்படைப்பு செயல்பாடுகளுக்காக வழக்கு தள்ளி வைக்கப்பட்டவுடனோ அல்லது அரச நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டவுடனோ, வழக்கின் அடுத்த விசாரணைக்கு என்னென்ன கூடுதல் செயல்கள் தேவைப்படும் என்பதை நாங்கள் முடிவு செய்வோம்.

5.10 குறுகிய கால கட்டத்தில், காவல்துறை அல்லது பிற விசாரணையாளர்களிடம் நாங்கள் கேட்பது:

[8] தீவிரத்தன்மை அதிகமுள்ள வழக்குகள் மட்டுமே கிரௌன் நீதிமன்றத்தால் எடுத்துக் கொள்ளப்படும். ஒப்படைப்பு செயல்முறைகள் தேவைப்படாமல், சிறப்பு செயல்பாட்டின் கீழ், குற்றவியல் நீதிமன்றத்தால் இவை முறையாக அங்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

அ) புலனாய்வின்போது சேகரிக்கப்பட்ட தடையங்கள் மற்றும் இதர சான்றுப்பொருள் குறித்த தகவல் உள்ள கோப்பு மற்றும் மூலக் குற்றம் சுமத்தும் முடிவில் மேற்கொள்ள வேண்டிய நிலுவையில் உள்ள செயல்களை முடிக்குமாறு கேட்டுக் கொள்வது;

ஆ) வழக்கை நீதிமன்றம் எளிதில் புரிந்து கொள்ள உதவும் திட்டங்கள் அல்லது புகைப்படங்கள் உட்பட, தேவையான கூடுதல் தடையங்கள் அல்லது அடுத்த விசாரணைக்குத் தேவைப்படும் தகவல் ஏதும் இருந்தால், அனுப்புமாறு கேட்டுக் கொள்வது;

இ) முந்தைய நீதிமன்ற விசாரணையில் அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்ட பணி ஏதும் இருந்தால் அதை மேற்கொள்ளச் செய்தல்; மற்றும்

ஈ) புலனாய்வின்போது சேகரிக்கப்பட்டு தொடர்புடைய, பயன்படுத்தாத சான்றுப்பொருட்களின் பட்டியலை அனுப்புமாறு கேட்டல், இதன் மூலம் வழக்குத் தொடுத்தவரின் வழக்குக்கு ஊறு விளைவிக்கும் அல்லது பிரதி பிரதிவாதியின் வழக்குக்கு உதவும் சான்றுப்பொருள் அல்லது தகவல் ஏதும் இருந்தால், அவற்றை பிரதிவாதிக்கு வெளிப்படுத்துவது குறித்த எங்கள் சட்டபூர்வ கடமைக்கு உட்பட்டு நடப்போம்;

5.11 ஒரு வழக்கு நீதவான் நீதிமன்றத்தில் நடைபெறுவதாக இருந்தால், விசாரணை நாளன்று நீதிமன்றத்தில் தடையத்தை வழங்குமாறு சாட்சிகளிடம் கூறவும், நீதிமன்றத்திலும், விசாரணைக்கு முன்பும் அவர்களுக்கு என்ன உதவி தேவைப்படும் என்றும் அவர்களிடம் விவாதிக்குமாறும், இவற்றை குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்யுமாறும் சாட்சிப் பாதுகாப்புக் குழுவிடம் (Witness Care Unit)[9] கேட்போம். அரச நீதிமன்ற வழக்குகளில், தான் குற்றமற்றவர் என்று பிரதிவாதி வேண்டிய பிறகு இவற்றைச் செய்யச் சொல்வோம்.

5.12 காவல்துறை அல்லது பிற விசாரணையாளர்கள் சமர்ப்பித்த புதிய சான்றுப்பொருட்கள் மற்றும் பிரதிவாதி வழக்குரைஞர்களிடம் வந்த கடிதத் தொடர்பு ஆகியவை கிடைத்தவுடன் குறிப்பிட்ட நேரத்தில் அவை சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளும் நோக்கத்தில் செயல்படுவோம்.

5.13 விசாரணை, ஒப்படைப்பு அல்லது முதலாவது அரச நீதிமன்ற விசாரணைக்கு ஒரு வழக்கைத் தயார்படுத்தும்போது:

அ) வழக்கு தொடுத்தவரால், முதன் முதலில் ஒரு வழக்கு கருத்தில் கொள்ளப்பட்டதிலிருந்து, என்ன மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அறிந்து, குற்றத் தீர்ப்பு வழங்குவதற்கான உண்மையான வாய்ப்பு வழங்க போதுமான தடையங்கள் இன்னமும் உள்ளனவா என்றும், பொதுமக்கள் நலனுக்காக வழக்கு தொடர வேண்டுமா என்றும் மதிப்பிடுவோம்;

ஆ) வழக்கை பலப்படுத்த கூடுதல் தடையங்களைக் கேட்க வேண்டுமா என்று முடிவெடுப்போம்;

[9] வழக்கு தொடுத்தவரின் சாட்சிகள் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு ஏற்பாடு செய்யவும், தங்கள் சாட்சியங்களைத் திறம்பட வழங்குவதற்கு ஏதுவாக அவர்களின் தேவைகளுக்கு உதவவும், தங்கள் வழக்கின் நிலை மற்றும் அதன் வெளிப்பாடு குறித்த தகவலை அவ்வப்போது அவர்களிடம் தெரிவிக்கவும், வழக்கு தொடுத்தல் சேவை மற்றும் காவல்துறை இரண்டும் கூட்டாக சாட்சிப் பாதுகாப்புக் குழுக்களை அமைத்துள்ளன.

இ) சாட்டப்பட்ட குற்றத்தை இனிமேலும் தொடர முடியாது என்றால், பொதுமக்கள் நலன் அடிப்படையில் வழக்குத் தொடுத்தல் தேவைப்படும், நிரூபிக்கக்கூடிய மாற்று குற்றச்செயலைக் கருதுவோம்;

ஈ) வெகு சாதாரண வழக்குகள் தவிர்ந்த பெரும்பாலான வழக்குகளைப் பொறுத்தவரை, தடையங்களின் பலத்தையும் பலவீனங்களையும் உள்ளடக்கி, குற்றத்தின் கூறு ஒவ்வொன்றையும் எவ்வாறு நிருபிப்பது, மற்றும் பிரதிவாதி வழக்குரைஞர் முன்வைக்கக்கூடிய எதிர்வாதத்தை எவ்வாறு எதிர்கொள்வது, அத்துடன் பொது நலனை முன்னிட்டு வழக்குத் தொடுத்தல் தேவையா என்பன போன்ற விவரங்களை வழக்குரைஞருக்கு ஒரு குறிப்பாகத் தயார்படுத்திக் கொடுப்போம்;

உ) மாற்றுக் குற்ற ஏற்பு வழக்குரைகளை அல்லது அவ்வாறானவற்றுக்கான அடிப்படை எதனையும் விவரிப்போம். அதேவேளை, குற்றத்தின் தீவிரத்தன்மைக்கு ஏற்ற தண்டனையை நீதிமன்றம் வழங்கலாம் என்பதை உறுதியாகக் கருத்தில் கொள்வோம்;

ஊ) நாங்கள் சார்ந்திருக்க வேண்டிய கூடுதல் தடையங்களின் நகல்களை பிரதிவாதிதரப்புக்கு வழங்குவோம்;

எ) தங்கள் தடையத்தை திறம்பட வழங்க சாட்சிகளுக்கு உதவ சிறப்பு நடவடிக்கைகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் நீதிமன்ற அனுமதியுடன் பயன்படுத்த வேண்டிய தடையங்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதி விண்ணப்பங்களை ஏற்கனவே முடிக்கவில்லை என்றால், எழுத்துபூர்வமான விண்ணப்பங்கள் அல்லது அறிக்கைகளைத் தயார் செய்வோம்;

ஏ) பயன்படுத்தப்படாத சான்றுப்பொருட்கள் வழக்குத் தொடுநர் தரப்பு வழக்குக்குப் பாதகமாகவும் பிரதிவாதி தரப்பு வழக்குக்கு சாதகமாகவும் இருக்கலாம் என்பதால் அவற்றைப் பிரதிவாதி தரப்புக்கு வெளியிடவேண்டுமா என் முடிவு செய்வோம்;

ஐ) வழக்குத்தொடுநரின் வழக்குக்கு பாதகமாகவும் பிரதிவாதி தரப்பு வழக்குக்குச் சாதகமாகவும் அமையக்கூடிய சான்றுப்பொருள் எதுவும், அதனை வெளியிடாது வைத்திருக்கலாமா என்று நீதிமன்றத்திடம் கேட்கவேண்டிய அளவுக்கு கூருணர்வுள்ளதா என்று முடிவு செய்வோம்;

ஒ) நாங்கள் பரிசீலனை செய்த கூருணர்வற்ற, பயன்படுத்தப்படாத சான்றுப் பொருட்களின் அட்டவணை ஒன்றை பிரதிவாதி தரப்புக்கு அனுப்புவோம். அத்துடன் நாங்கள் வெளிப்படுத்தவுள்ள சான்றுப்பொருட்களின் நகல்களை, அல்லது அவற்றை எங்கே பரிசீலனையிடலாம் என்ற அறிவுறுத்தல்களை கூடவே அனுப்புவோம். இதுகுறித்து மேலும் நாங்கள் இந்தத் தகுதிநிலையின் 19 முதல் 25 -ஆம் பத்திகளில் விளக்கியுள்ளோம்;

ஓ) பிரதிவாதிக்கு தண்டனை வழங்கப்பட்டால், தீர்ப்பு விசாரணையின்போது பயன்படுத்த வேண்டிய பாதிக்கப்பட்டவரின் தனிப்பட்ட அறிக்கையைத் தயார் செய்வதற்கான வாய்ப்பு, பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவோம்;

ஔ) முடியுமானால், தடையங்களை சாட்சிகள் வழங்குவதற்கு முன், தங்கள் நினைவைப் புதுப்பிக்க, விசாரணைக்கு முன் தங்களின் வீடியோ நேர்முகத்தின் பதிவை நீதிமன்றத்தில் மீண்டும் ஒருமுறை காண ஏற்பாடு செய்வோம்.

அஅ) சாட்சிகளின் மற்ற தேவைகள் ஏதும் இருந்தால் அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்றும், சாட்சிகள் நீதிமன்றத்தில் ஆஜராவதை உறுதிப்படுத்த தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்றும் சரிபார்ப்போம்.

5.14 நிலுவையில் உள்ள விவகாரங்களில் விரைவாக கவனம் செலுத்துமாறு காவல்துறை மற்றும் பிற விசாரணையாளர்களிடம் கேட்டுக் கொள்வோம்.

5.15 ஏதோ ஒரு காரணத்திற்காக, குறிப்பிட்ட தேதியில் வழக்கு நடைபெறாமல் போகும் வாய்ப்பு இருந்தால், புதிய தேதியை வழங்குவது குறித்து பரிசீலிக்குமாறு நீதிமன்றத்திடம் கேட்டுக் கொள்வோம்.

**அரச நீதிமன்றத்திற்காக வழக்குகளைத் தயார்படுத்தும்போது மேற்கொள்ள வேண்டிய கூடுதல் பணி**

5.16 அரச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தால், பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விவரிக்கும் குற்றப்பத்திரிகையை அரச நீதிமன்ற தேவைகளுக்கு ஏற்ப முறையான வார்த்தைகளில் தயார் செய்வோம்.

5.17 வழக்கை அரச நீதிமன்றத்தில் முன்வைக்கும் வழக்குரைஞருக்கு எழுத்து வடிவ வழிகாட்டுதல்களையும் நாங்கள் தயார் செய்வோம். வழக்கு தொடுப்போர் சார்பாக அரச நீதிமன்றத்தில் முறையிட அங்கீகரிக்கப்பட்ட அனைத்து வழக்குரைஞர்களுக்கும் பின்வரும் தலைப்பிட்ட நிலையான வழிகாட்டுதல்கள் வழங்கப்படும்: வழக்கு தொடுக்கும் வழக்குரைஞர்களுக்கான *CPS* வழிகாட்டுதல்கள் *(CPS Instructions for Prosecuting Advocates)*[10]. அதுமட்டுமல்லாமல், நாங்கள்:

அ) வழக்கில் சேகரிக்கப்பட்ட அனைத்து தடையங்கள், பிரதி வழக்குரைஞருக்கு பொருட்களை வெளிப்படுத்துவது குறித்து வழக்கு தொடுத்தவரின் முடிவுகளை எடுத்துரைக்கும் கூருணர்வற்ற பயன்படுத்தாத பொருட்கள், மற்றும் நீதிமன்றத்துடனான அனைத்து கடிதத் தொடர்பு மற்றும் பட்டியலிடப்பட்ட பிரதிவாதி வழக்குரைஞர்களின் பட்டியலின் நகல்களை இணைப்போம்;

ஆ) தங்கள் தடையத்தை திறம்பட வழங்க சாட்சிகளுக்கு உதவ சிறப்பு நடவடிக்கைகளுக்கான விண்ணப்பங்கள், அல்லது செவிவழி குற்றத் தடைய அல்லது ஒழுங்கீன குற்றத் தடையம் போன்று, நீதிமன்றத்தின் அனுமதியுடன் பயன்படுத்தத் தேவைப்படும் எழுத்துபூர்வ விண்ணப்பங்கள் அல்லது அறிக்கைகளின் நகல்களை வழங்குதல், அல்லது இந்த விண்ணப்பங்கள் ஏதும் வழங்கும் தேவை ஏன் இல்லை என்று விளக்குதல்;

இ) சுமத்தப்பட்ட குற்றத்தின் அனைத்துக் கூறுகளையும் நிரூபிக்க வழக்கை எப்படி முன்வைக்க வேண்டும் என்றும், எதிர்பார்க்கக்கூடிய எதிர் வாதங்களையும், வழக்கின் பலவீனங்களையும் எப்படிக் கையாள்வது என்றும் சுருக்கமாக விவரித்தல்;

[10] வழக்கு தொடுத்தவரின் சாட்சிகள் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு ஏற்பாடு செய்யவும், தங்கள் சாட்சியங்களைத் திறம்பட வழங்குவதற்கு ஏதுவாக அவர்களின் தேவைகளுக்கு உதவவும், தங்கள் வழக்கின் நிலை மற்றும் அதன் வெளிப்பாடு குறித்த தகவலை அவ்வப்போது அவர்களிடம் தெரிவிக்கவும், வழக்கு தொடுத்தல் சேவை மற்றும் காவல்துறை இரண்டும் கூட்டாக சாட்சிப் பாதுகாப்புக் குழுக்களை அமைத்துள்ளன.

ஈ) வழக்கு தொடுத்தவரின் குற்றச்சாட்டு முடிவின் நகலை வழங்குதல், அல்லது வழக்கு தொடுப்பவரின் அனுமதின்றி ஒரு பிரதிவாதி மீது காவல்துறை குற்றம் சாட்டிய வழக்குகளில், வழக்கை ஏற்றுக் கொள்வதாக வழக்கு தொடுத்தவர் எடுத்த முடிவின் நகலை வழங்குதல்;

உ) வழக்கை பாதிக்கும், வழக்கத்திற்கு மாறான சட்ட வழிவகைகளை குறிப்பிடுதல்;

ஊ) நாங்கள் மேற்கொண்ட கூடுதல் பணிகள் குறித்து விளக்குதல்;

எ) வழக்கை பலப்படுத்துவதற்கு அல்லது அதை மேலும் தெளிவாக நீதிமன்றத்தில் முன்வைக்க, தாங்கள் கருதும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து முறையாக அறிவுறுத்துமாறு வழக்குரைஞரை கேட்டுக் கொள்ளுதல்;

ஏ) பிரதிவாதியிடமிருந்து நாங்கள் ஏற்றுகொள்ளத் தயாராக உள்ள மாற்று வேண்டுதல்கள் ஏதும் இருந்தால் அவற்றைச் சுட்டிக்காட்டுதல்; ரகசியத் தகவலைப் பெற அல்லது பாதுகாப்பதற்கான விண்ணப்பங்கள் போன்று, விசாரணைக்கு முன்பு வழக்குரைஞரின் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டிய வழக்கின் குறிப்பிட்ட சிறப்பம்சங்கள் ஏதும் இருந்தால் அவற்றை அடையாளம் காணுதல்;

ஐ) பிரதிவாதி சிறைக்காவலில் உள்ளாரா, அவர் காவலில் வைக்கப்பட்டுள்ள கால எல்லை, அல்லது அவர் பிணையில் இருந்தால், நீதிமன்றம் என்ன நிபந்தனைகளை விதித்தது போன்ற விவரங்களை குறித்தல்;

ஒ) நீதிமன்றத்துக்குச் சாட்சியை வரவழைப்பதற்கு சாட்சிக்கான அழைப்பாணை அல்லது சாட்சிக்கான கைது உத்தரவு ஏதும் தேவைப்படுமா, அல்லது அவர்களது வருகை தேவைப்படாது என்று கருதும்பட்சத்தில் அது ஏன் என்று விளக்குதல்;

ஓ) வழக்குத் தொடுத்தவரின் சாட்சிகள் எந்த வரிசையில் தங்கள் தடையங்களை வழங்குவர் என்று முடிவெடுக்கும்படி வழக்குரைஞரைக் கேட்டுக் கொள்ளுதல், இதன் மூலம் தேவையற்று நீண்ட நேரம் நீதிமன்றத்தில் இருக்க வேண்டிய அவசியம் ஏற்படாது;

ஔ) நிலுவையில் தடையங்கள், குறிப்பாக விஞ்ஞான அல்லது நிபுணரின் தடையம், ஏதும் இருந்தால், அவற்றை பெறுவதாக எதிர்பார்க்கும் தேதிகளை குறிப்பிடுதல்; மற்றும்

அஅ) வழக்கிற்கு பொறுப்பேற்றுள்ள வழக்கு தொடுப்பவர் மற்றும் சட்ட சட்டத்துணை அலுவலர் தொடர்பு விவரங்களை வழங்குதல்.

5.18 வழக்கு முழுமையாகத் தயார்படுத்தப்பட்டதை உறுதிசெய்ய தேவைப்படும் வழக்குரைஞரின் அறிவுரையின் பேரில் கூடுதல் பணிகளை மேற்கொள்வோம்.

**நேர்மையான விசாரணையை உறுதிப்படுத்த பிரதிவாதிகளுக்கு விவரங்களை வெளிப்படுத்துதல்**

5.19 புலனாய்வின்போது சேகரிக்கப்பட்டு, வழக்கு தொடுத்தல் தடையத்தின் ஒரு பகுதியாக பயன்படுத்தப்படாத தொடர்புடைய அனைத்து சான்றுப்பொருட்களின் பட்டியலையும், மற்ற அட்டவணைகளையும் காவல்துறை மற்றும் பிற விசாரணையாளர்கள் எங்களுக்காக தயாரிக்க வேண்டும்.

5.20 பின்வரும் அடிப்படையில் எங்கள் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள சான்றுப்பொருட்களைக் கருத்தில் கொள்வோம்:

அ) அவற்றில் எதனையும் வழக்குத் தொடுத்தல் தடையத்தின் ஒரு பகுதியாகப் பயன்படுத்த வேண்டுமா;

ஆ) அவற்றில் ஏதும் தொடுத்த வழக்குக்கு பாதகமாக அமையுமா;

இ) அவற்றில் ஏதும் பிரதிவாதி வழக்குரைஞருக்கு உதவுமா; மற்றும்

ஈ) பிரதிவாதி வழக்குரைஞருக்கு வெளிப்படுத்தக் கூடாத அளவுக்கு கூருணர்வுடன் ஏதும் உள்ளதா.

5.21 இந்த வகைகளில் வரும் ஏதாவது பொருளின் நகல்களை காவல்துறை அல்லது பிற விசாரணையாளர்களிடம் நாங்கள் கேட்போம், இதன் மூலம் அவற்றை பயன்படுத்துவது குறித்து நாங்கள் பின்னர் கருதுவோம்.

5.22 பட்டியலில் உள்ள ஒவ்வொரு பொருளுக்கும், தகுந்த காரணங்களுடன் எடுக்கும் முடிவை நாங்கள் பதிவு செய்வோம். வெளிப்படுத்தக்கூடாத கூருணர்வுள்ள பொருட்களைத் தவிர, பிரதி வழக்குரைஞருக்கு பட்டியலை நாங்கள் வழங்குவோம், இதன் மூலம் எங்களிடம் உள்ள அனைத்து பொருட்கள் குறித்தும் அவர்கள் அறிந்து கொள்ளலாம்.

5.23 வழக்குத் தொடுத்தலுக்குப் பாதகமான அல்லது பிரதிவாதியின் வழக்கிற்கு உதவக்கூடிய கூருணர்வற்ற பயன்படுத்தாத பொருட்களின் நகல்களை கூடிய விரைவில் பிரதிவாதி வழக்குரைஞருக்கு வழங்குவோம், அல்லது நடைமுறையில் நகலை உருவாக்க முடியவில்லை என்றால், அவற்றை ஆய்வு செய்ய அவர்களை அழைப்போம், வழக்கமாக ஒரு காவல் நிலையத்தில்.

5.24 பிரதிவாதி தரப்புக்கு வெளிப்படுத்தக் கூடாத அளவுக்கு கூருணர்வுடைய தகவல் ஏதும் இருந்தால், அது வழக்கு தொடுத்தலை பாதிக்கும் விதமாக அல்லது பிரதிவாதி தரப்புக்கு உதவும் விதமாக இருக்கும் பட்சத்தில், அவற்றை வெளிப்படுத்துவதா அல்லது வேண்டாமா என்பது குறித்து நீதிமன்றம் முடிவெடுக்கும்படி கேட்டுக் கொள்வோம்.

5.25 வெளிப்படுத்தல் குறித்த கேள்வியை வழக்கின் மொத்த காலகட்டத்திலும் மதிப்பாய்வு செய்து கொண்டே இருப்போம், அதன்மேல் வழக்குத் தொடுநர்வழக்குக்குப் பாதகமாகவும் பிரதிவாதி தரப்பு வழக்குக்கு சாதகமாகவும் அமைந்த புதிய தகவல்கள் வெளிவந்தால், அப்போதும் மீளாய்வு தொடரும். பிரதிவாதி தரப்பு தங்கள் வழக்குக் குறித்து எங்களிடம் கூறும்போது எங்கள் வெளிப்படுத்தல் முடிவுகளை மீள்பரிசோதனை செய்வோம். பிரதி வழக்குரைஞரிடமிருந்து பெறப்பட்ட தகவல் குறித்து கருத்து கூற காவல்துறை அல்லது பிற விசாரணையாளர்களை கேட்பதும் இதில் அடங்கும்.

**சிறைக்காவல் நேர வரம்புகள்**

5.26 விசாரணை அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமான ஒப்படைப்பு நிலுவையில் இருக்கும்போது, நேர நீட்டிப்பிற்கு நீதிமன்றம் அனுமதி அளிக்கும் வரை, பிரதிவாதிகள் காவலில் வைக்கப்படுவர்.

5.27 பிரதிவாதி சிறைக்காவலில் வைக்கப்பட்டால், முதல் விசாரணை மற்றும் அடுத்தடுத்த விசாரணையின் போது, தொடர்புடைய சிறைக்காவல் வைப்பு நேரம் காலாவதியாகும் தேதியை நீதிமன்றத்திற்கு வழக்குரைஞர் அறிவிக்க வேண்டும்.

5.28 இந்தத் தகவலை நாங்கள் எங்கள் வழக்குக் கோப்பில் குறித்துக் கொண்டு, எங்கள் சிறைக்காவல் நேர வரம்பு குறிப்பேட்டில் பதிவு செய்வோம்.

5.29 சிறைக்காவல் நேர வரம்பிற்குள் விசாரணை தொடங்குவதை அல்லது ஒப்படைப்பு நிகழ்வதை உறுதிப்படுத்த, சிறைக்காவல் வழக்குகள் தயாரிப்புக்கு நாங்கள் முன்னுரிமை வழங்குவோம், அல்லது நேர வரம்பை நீட்டிக்குமாறு நீதிமன்றத்தை கேட்கும் சூழல் ஏற்பட்டால், தேவைப்படும் அனைத்து முயற்சிகளையும் கடுமையாகவும் விரைவாகவும் மேற்கொண்டோம் என்று கூறுவோம்.

5.30 சிறைக்காவல் நேர வரம்பை நெருங்குகிறோமா என்பதைச் சரிபார்க்க, சிறைக்காவல் நேர வரம்பு குறிப்பேடு மற்றும் எங்கள் கணினிமயமாக்கப்பட்ட வழக்கு மேலாண்மை அமைப்பை நாங்கள் மதிப்பாய்வு செய்வோம். இந்தச் சரிபார்ப்பில் குறைந்த பட்சம் வாரம் ஒருமுறை அடையாளம் காணப்பட்ட வழக்குகளை நியமிக்கப்பட்ட சட்ட நிர்வாகி அல்லது மூத்த வழக்குரைஞர் கருத்தில் கொள்வார். நேர வரம்பு காலாவதியாவதற்கு முன்பு, குறித்த நேரத்தில், நேர வரம்பிற்குள் வழக்கு தொடர முடியாமல் போகும் சூழ்நிலை உருவாகும்போது நீதிமன்றம் மற்றும் பிரதிவாதித் தரப்புக்கு அறிவித்தல் வழங்குவோம். இதனால் நீட்டிப்பு வழங்க வேண்டுமா என்பது குறித்து நீதிமன்றம் கருதும் வாய்ப்புள்ளது. அனைத்து முயற்சிகளையும் கடுமையாகவும் விரைவாகவும் வழக்கு தொடுத்தோர் மேற்கொண்டார்களா என்று நீதிமன்றம் முடிவெடுப்பதற்கு உதவும் வகையில், நிகழ்வுகளின் வரிசைப்பட்டியலை வழங்குவோம்.

5.31 அமைப்பு முறைகளின்படி அனைத்தும் சரிவர இயங்குவதை நிர்வாகிகள் வாரம் ஒருமுறை சரிபார்த்து, அமைப்பு முறையாக இயங்குகிறது என்று எழுத்துபூர்வ உறுதிப்பாட்டை தங்களின் தலைமை அரச வழக்குரைஞருக்கு வழங்குவர்.

# தகுதிநிலை 6

## எங்கள் வழக்குகளை நேர்மையாகவும், உறுதியாகவும் முன்னிலைப்படுத்துவோம்

**வழக்கு விசாரணை நடத்துதல்**[11]

6.1 விசாரணைக்கு முன், வழக்குரைஞர்:

அ) வழக்கின் மறுஆய்வு குறிப்புகள் உள்ளிட்ட முழு வரலாறையும் கவனத்தில் கொண்டு, அனைத்தும் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்;

ஆ) வழக்கை விசாரிக்கும் அதிகாரியுடன் வழக்கு தொடர்பாக இயலுமான போது விவாதித்து, சம்பந்தப்பட்ட நபர் வழக்கின் முழு பின்னணி பற்றி அறிந்துள்ளாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இ) மிக எளிதான வழக்குகள் தவிர்ந்த அனைத்து வழக்குகளிலும், சாட்சியம் பற்றிய துவக்க உரை அல்லது மேலோட்டமான கருத்தை தயாரித்து, இந்த வழக்கு என்ன என்பதை மாஜிஸ்திரேட் அல்லது ஜூரர்கள் புரிந்து கொள்ள உதவுவார். பிரதிவாதி குற்றத்தை ஏற்றுக்கொண்டால், அவருக்குத் தண்டனை வழங்குவதில் நீதவானுக்கு (மாஜிஸ்ட்ரேட்) அல்லது ஜூரர்களுக்கு உதவுவார்;

ஈ) பிரதிவாதியின் மற்றும் தெரிந்த பிரதிவாதி தரப்புச் சாட்சிகளின் குறுக்கு விசாரணைக்கான தற்காலிகமாக ஒரு திட்டத்தை தயாரிப்பார்.

உ) மாஜிஸ்திரேட் அல்லது நீதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏதாவது சட்டரீதியான விவாதங்களை மேலோட்டமாக எழுத்துப்பூர்வமாக தயாரித்து வைத்துக் கொள்வார்; மற்றும்

ஊ) வழக்குத் தொடுநர் தரப்புச் சாட்சிகள் தேவைக்கு மேலான நேரத்தை நீதிமன்றத்தில் செலவிடாத வகையில், கிரவுன் நீதிமன்றங்கள் மற்றும் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களில் ஒரு நாளைக்கு மேல் நீடிக்கும் சாத்தியம் உள்ள வழக்குகளில் அவர்கள் அளிக்கவேண்டிய சாட்சியங்களை வரிசைப்படுத்தி முடிவு செய்வார்.

6.2 வழக்குரைஞர் நீதிமன்றத்திற்கு உரிய நேரத்திற்கு வந்து சாட்சிகளை சநதிப்பார்; மற்றும்:

அ) வழக்குரைஞர் தன்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்திக் கொள்வார்;

ஆ) அவர்களிடம் அவர்களது சாட்சிய வாக்குமூலங்களைக் காண்பிப்பார், அல்லது, சாட்சியங்களின் சேவையை[12] பிரதிநிதி ஒருவரைக்கொண்டு காண்பிக்க

---

[11] நீதிமன்றத்தில் வாதிடும் வழக்குரைஞர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் தகுதிநிலைகளை வழக்கு தொடுத்தல் சேவை தனது சார்பில் தேசிய வழக்குரை தொழிலுக்கான தகுதிநிலைகளில் *(National Standards of Advocacy)* அமைத்துள்ளது, இது எங்கள் வலைத்தளத்தில் (www.cps.gov.uk) கிடைக்கும் அல்லது வேண்டுதலின் பேரில் வழங்கப்படும் (விவரங்களுக்கு பின் அட்டையைப் பார்க்கவும்).

[12] குற்றவியல் விசாரணைக்கு முன்பும் அது நடைபெறும்போதும், சாட்சிகளுக்கு ஆதரவளிக்கும் தேசிய அமைப்பின் ஒரு அங்கமே சாட்சியங்கள் சேவை.

வேண்டும். (சாட்சியங்களுடன் வீடியோ பதிவு பேட்டி இருப்பின் அதனை காண்பிப்பதால்) அவர்கள் சாட்சியமளிப்பதற்குமுன் தாங்கள் என்ன கூறினோம் என்பதை நினைவு கூர அது ஏதுவாகும்;

இ) சாட்சிகளுக்கு உதவ, நீதிமன்றம் இணங்கிய சிறப்பு நடவடிக்கைகளின் பலாபலன்கள் உட்பட, அன்றைய நாள் நடைபெறவிருப்பவற்றை அவர் சாட்சிகளுக்கு விளக்குவார்; மற்றும்

ஈ) அவர்களிடம் ஏதாவது கேள்விகள் இருப்பின் சட்டம் அனுமதித்தால், அவற்றுக்கு பதிலளிப்பார்.

6.3 என்றாலும், தங்களின் தொழில் விதிமுறைகளின் கீழ், வழக்குரைஞர் சாட்சியுடன் அவரது சாட்சியம் குறித்து உரையாடலாகாது. இதர சாட்சிகள் என்ன சாட்சியம் அளிக்கவுள்ளனர் என்றும் கூறலாகாது;

6.4 நீதிமன்ற நாளில், வழக்குரைஞர்:

அ) வழக்கு விசாரணையை வெளிப்படையாக, நேர்மை மற்றும் ஒருமைப்பாட்டுடனும், நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு, தண்டனை பெற்றுத்தர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் அல்லாமல் செயல்படுவார்;

ஆ) வழக்கு தொடுநர் சாட்சிகளுக்கு – நேரடியாகவோ அல்லது நீதிமன்ற அறையிலிருந்து அவரால் வெளியேற இயலாதபோது, உதவியாளர், நீதிமன்ற அலுவலர் மூலமாகவோ, தாமதமாவதற்கான காரணங்களை தெரியப்படுத்த வேண்டும்;

இ) சாட்சிகள் மற்றும் பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் மரியாதையாக நடத்துவதுடன் வழக்குத் தொடுப்பு சாட்சிகளிடம் பொருத்தமற்ற கேள்விகளை கேட்பதை தடுப்பதில் தலையிடுமாறு நீதிமன்றத்தைக் கோருவார்; மற்றும்

ஈ) வழக்குத்தொடுப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்து முடித்தவுடன் அவர்கள் நீதிமன்றத்தை விட்டு வெளியேற விரும்பினால், நீதிமன்ற அனுமதியைப் பெற்றுத் தருவார். அவர்கள் நீதிமன்றத்தில் இருக்க வேண்டிய நிர்ப்பந்த காரணம் இருந்தால் மட்டுமே அவர்கள் இருக்க வேண்டும்.

6.5 வழக்குரைஞர் நேரடியாகவோ அல்லது உதவியாளர் மூலமாகவோ:

அ) சான்றாவணங்களை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்வார்;

ஆ) வழக்கு தொடுப்பு சாட்சிகளுடன் தொடர்பு கொண்டு, சரியான நேரத்தில் அவர்கள் சாட்சியம் அளிப்பதற்கு தயாராக இருப்பதை உறுதிப்படுத்தி, ஏதாவது தாமதம் ஏற்படுமானால் அவர்களிடம் தெரியப்படுத்துவார்; மற்றும்

இ) நீதிமன்ற முடிவின்படி ஏதாவது கடைசிநேரத்தில் சட்ட விவாத ஆவணங்களில் திருத்தம் தேவைப்பட்டால் அதனை செய்வார்.

6.6 பிரதிவாதி குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டால், வழக்குத் தொடுப்பு வழக்குரைஞர்கள், அவருக்குத் தண்டனை வழங்கும் செயற்பாட்டில், நீதவான்களுக்கு அல்லது நீதிபதிகளுக்கு உதவுவார்கள். தண்டனை ஒத்திவைக்கப்படும்போது, குற்றவாளியை தண்டனை வழங்கும் வரை காவலில் வைத்திருப்பதா என்று தீர்மானிப்பதிலும் அவர்கள்

உதவுவார்கள். தண்டனை வழங்குதல் செயல்பாட்டில் வழக்குத் தொடுநரின் பங்கு பற்றி தகுதிநிலை 9 -இல் மேலதிக விவரங்களை அளித்துள்ளோம்.

**குற்ற ஏற்பு வழக்குரைகளைக் கையாள்தல்**[13]

6.7 பல பிரதிவாதிகள், பல குற்றங்களில் சிலவற்றை, அல்லது வேறு ஒரு குற்றத்தை, அல்லது சம்பவங்களில் ஒரு குறிப்பிட்ட கூற்றின் அடிப்படையில் குற்றத்தை ஏற்றுக்கொண்டு வழக்குரை செய்வார்கள். இது அனேகமாக இறுதி நேரத்தில், விசாரணை தொடங்குவதற்குச் சற்று முன் ஏற்படும் நிகழ்வு. இதுபோன்ற நிலை ஏற்பட்டால், நாம்:

அ) பாதிக்கப்பட்டவர் அல்லது அவர்களின் குடும்பத்தினர் தெரிவிக்கும் கருத்துகளை எடுத்துக் கொண்டு, அந்த கோரிக்கையை பொது நலன் அடிப்படையில் ஏற்பதா என முடிவெடுக்க வேண்டும்;

ஆ) குற்ற ஏற்பு வழக்குரைகள், கிடைக்கக்கூடிய துணை ஆணைகள் மீது கொள்ளும் தார்ப்பரியங்களைக் கவனத்தில் கொள்ளும் அதே வேளை, நீதிமன்றம் குற்றத்தின் தீவிரத்தன்மைக்கு இணையாகத் தண்டனை வழங்கலாம் என்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். குற்ற ஏற்பு வழக்குரை உண்மையற்ற அல்லது தப்பிதமான நிகழ்வுகளின் அடிப்படையில் எழுந்ததல்ல என்பதையும், அது பாதிக்கப்பட்டவரின் நலன்களுக்குப் பாதகமானதல்ல என்பதையும் நாங்கள் உறுதி செய்துகொள்வோம். வழக்குரையின் அடிப்படையில் உடன்பாடு ஏற்படாவிட்டால் வழக்குரைஞர் நீதிமன்றைத்தை சாட்சியங்களை விசாரிக்குமாறு கோரலாம். அவறறின் அடிப்படையல் குற்றவாளிக்கு விதிக்கவேண்டிய தண்டனையை நீதிமன்றம் தீர்மானிக்கலாம்.

இ) ஏற்கப்பட்ட குற்ற ஏற்பு அடிப்படை எழுத்தில், பிரதிவாதி வழக்குரைஞர் மற்றும் வழக்கத் தொடுப்பு வழக்குரைஞர் என்போரின் கையெழுத்துடன் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

[13] கோரிக்கை ஏற்பு மற்று தண்டனை விதித்தல் செயல்பாட்டில் வழக்குரைஞரின் பங்கு பற்றிய தலைமை சட்ட அலுவலரின் வழிகாட்டுதலில் *(The Attorney General's Guidelines on The Acceptance of Pleas and the Prosecutor's Role)* நீதிமன்றங்கள், வழக்குரைஞர்கள, எதிர்தரப்பு வழக்குரைஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. www.attorneygeneral.gov.uk என்ற வலைத்தளத்தில் கிடைக்கும் அல்லது வேண்டுதலின் பேரில் வழங்கப்படும் (விவரங்களுக்கு பின் அட்டையைப் பார்க்கவும்).

# தகுதிநிலை 7

## பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் தேவைகளை மதிப்பீடு செய்வோம், அவர்களின் வழக்கின் போக்கை அவ்வப்போது தெரியப்படுத்துவோம், தங்களிடம் உள்ள சிறந்த தடையத்தை வழங்க அவர்களுக்கு உதவ தகுந்த ஆதரவை அவர்களிடம் கேட்போம்[14]

7.1 பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுடன் நமது பரிவர்த்தனையின் போது, நீதியை நிலைநிறுத்துவதில் சமநிலையை முன்னிலைப்படுத்தும் நம் கடமையில் குறிப்பிட்ட கவனம் செலுத்துகிறோம்.

7.2 சாட்சி கண்காணிப்பு அதிகாரி, அல்லது சிறப்பு வழக்குகளில், ஒவ்வொரு வழக்கிற்கும் ஒரு காவல்துறை அதிகாரியோ அல்லது குடும்ப இழப்புநிலை அதிகாரியோ[15] ஒதுக்கப்பட்டு, பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியங்களுடன் வழக்கில் முதன்முறையாக ஆஜராவதில் இருந்து வழக்கு முடியும் வரை நேரடித் தொடர்பு இருத்தல் வேண்டும். வழக்கின் முன்னேற்றம் குறித்து அவர்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நீதிமன்ற விசாரணையின் அனைத்து நிலைகள் குறித்தும் தகவல் தெரிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்டோர், மற்றும் சாட்சிகளின் அனைத்து தேவைகளையும் அறிந்து அவை பூர்த்தி செய்யப்பட்டதை உறுதிப்படுத்த வேண்டும். பிரதிவாதி குற்றமிழைத்தவராக காணப்பட்டால் அல்லது குற்றத்தை அவர் ஏற்றுக்கொண்டால், நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டிய பாதிக்கப்பட்டவரின் தனிப்பட்ட அறிக்கையை கேட்டுப் பெறுவதை அந்த அதிகாரி உறுதிப்படுத்த வேண்டும்.

7.3 பிரதிவாதி தான் குற்றவாளி அல்ல என்று கூறும்போது, ஒரு சாட்சி கண்காணிப்பு அதிகாரி:

அ) வழக்கு தொடுத்தல் சேவையில் இருந்து தகவல் கிடைத்த நேரத்தில் இருந்து குறிப்பிட்ட காலத்துக்குள் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவேண்டிய சாட்சிகளுக்கு, விசரரணைத் திகதியை அறிவிப்பார்;

ஆ) குற்றவாளி அல்ல என்ற வழக்குரையை அடுத்து சாட்சி கண்காணிப்பு அதிகாரி, நீதிமன்னறத்தல் சமுகமிக்கவேண்டிய, பொதுநிலை மக்களைச் சார்ந்த சாட்சிகளுக்கு முழு தேவைகள் மதிப்பாய்வு ஒன்றை நடத்துவார். நீதிமன்றத்துக்கு வருவது பற்றிய தமது கவலைகளை வெளிப்படுத்த அவர்களுக்கு இது வாய்ப்பளிக்கும். உதாரணமாக குழந்தை கவனிப்பு மற்றும் போக்குவரத்துச் சிக்கல்கள் இவற்றில அடங்கும். சாட்சி கண்காணிப்பு அதிகாரி, சாட்சிகள் தமது சாடசியத்தை வலுவான முறையில் வழங்குவதற்கு சிறப்பு ஏற்பாடுகள் தேவையாவென ஆராயவும் இது வாயப்பளிக்கும்;

இ) உடல் ஊனமுற்ற சாட்சிகளுக்கும், மருத்துவச் சிக்கல்கள் உள்ள சாட்சிகளுக்கும், பேச்சு மொழிபெயர்ப்பாளர்கள் போன்ற தொடர்பாடல் தேவை உள்ளவர்களுக்கும்,

---

[14] CPS கொள்கை அறிக்கை, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பிரிவில் வழக்குரைஞரின் ஏற்புறுதி, குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சி ஆவணத்திகான நடைமுறைக் குறியீடு, ஆகியவற்றையும் பார்க்கவும், அனைத்தும் எங்கள் வலைத்தளத்தில் (www.cps.gov.uk) கிடைக்கும் அல்லது வேண்டுதலின் பேரில் வழங்கப்படும் (விவரங்களுக்கு பின் அட்டையைப் பார்க்கவும்).

[15] மரணம் ஏற்படும் வழக்குகளில், புலனாய்வாளர்கள், வழக்குரைஞர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்திற்கு இடையே இணைப்பை உருவாக்கும் சிறப்பு பயிற்சி பெற்ற காவல் அதிகாரிகளே ஃபேமிலி பிரீவ்மென்ட் ஆஃபீசர்ஸ் (ஃபேமிலி லயசன் ஆஃபீசர்ஸ் என்றும் அழைக்கப்படுவர்)

தேவையானால, நீதிமன்ற அனுமதியுடன் விசேட ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பார்;

உ) பொருத்தமானால் சாட்சியை வேறு ஏஜன்சி ஒன்றுக்கு அனுப்புவார். உதாரணமாக சம்பந்தப்பட்ட ஆதரவுக் குழுவுக்கு. அவர்களால் தனித்துவ உதவி வழங்கமுடியும்; மற்றும்

ஊ) சாட்சி சேவையுடன்[16] சாட்சிகளை தொடர்பில் இருக்குமாறு செய்வார். உரிய வழக்கு விசாரணையின் போதும், அதன் பிறகும் நடைமுறையில் மற்றும் உணர்ச்சிப்பூர்வ ஆதரவை அளிக்கவும், விசாரணை தேதிக்கு முன்பே சாட்சியை நீதிமன்றத்திற்கு வரவழைத்து, வழக்கமான நீதிமன்ற நடைமுறையைப் பார்த்து சாட்சி புரிந்து கொள்ள வாய்ப்பு வழங்கவும், விசாரணை நாளில் சாட்சி எளிதாக இருப்பதற்கு வழிவகை செய்தல் வேண்டும். இந்த ஆதரவில் ஒரு பகுதியை பாதிக்கப்பட்டவரின் ஆதரவு என் அமைப்பு வழங்கி வருகிறது.

7.4 வழக்கு மேல்முறையீட்டிற்குச் செல்கையில் சாட்சி அங்கு சென்று ஆஜராவதற்கு, சாட்சி கண்காணிப்பு அதிகாரி இதேபோன்ற செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

7.5 வழக்கு முடிவடையும் போது, ஒரு சாட்சி கண்காணிப்பு அதிகாரியானவர் பாதிக்கப்பட்டோரிமும், பொதுமக்கள் நிலை சாட்சிகளிடமும், நீதிமன்றத்தில் இருந்து முடிவுகள் வந்து குறிப்பிட்ட காலை எல்லைக்குள், அவர்களது விருப்பத்துக்குரிய தொடர்பு சாதன வழியாக, முடிவுகளைத் தெரித்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட ஆதரவு சேவையின் ஆதரவு தேவைப்பகிறதா என்றும் அவர் கேட்கவேண்டும்.

7.6 பொருத்தமான வழக்குகளில் வழக்குரைஞர்கள் சாட்சிகளை தனிப்பட்ட முறையில் சந்தித்து அவர்களின் விசேட தேவைகள் குறித்து பிரத்யேக முறையில் விவாதிப்பர்.

7.7 சில விதிவிலக்கான வழக்குகளில் சாட்சியின் அடையாளம் குறித்து அது நியாயமானதாயின், வெளிப்படுத்தாதிருக்க நாங்கள் நீதிமன்றத்தின் அனுமதியைக் கோருவோம்.

7.8 மரணம் தொடர்பான வழக்குகளில், பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினரை வழக்குரைஞர் சந்தித்து ஆரம்ப நிலையிலிருந்து, வழக்கை எவ்விதம் கையாள வேண்டும் என்று தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு நீதிமன்ற விசாரணையின்[17] போதும், என்ன நிகழக்கூடும் என்று எதிர்பார்ப்பதையும் வழக்குரைஞர் தெரிவிக்க வேண்டும்.

---

[16] குற்றவியல் விசாரணைக்கு முன்பும் அது நடைபெறும்போதும், சாட்சிகளுக்கு ஆதரவளிக்கும் தேசிய அமைப்பான பாதிக்கப்பட்டோர் ஆதரவின் ஒரு அங்கமே சாட்சியங்கள் சேவை.

[17] இதுவே பாதிக்கப்பட்டோர் ஒருமுகத் திட்டம் (Victim Focus) என்றழைக்கப்படுகிறது மேலும் விவரங்கள் எங்கள் வலைத்தளத்தில் (www.cps.gov.uk) கிடைக்கும் அல்லது வேண்டுதலின் பேரில் வழங்கப்படும் (விவரங்களுக்கு பின் அட்டையைப் பார்க்கவும்).

# தகுதிநிலை 8

## வழக்குகளை நிறுத்தும்போது அல்லது தண்டனையை பெரிய அளவில் மாற்றும்போது, பாதிக்கப்பட்டவர்களிடம் எங்கள் முடிவுகளை விளக்குவோம்

8.1 ஒரு வழக்கை நிறுத்த முடிவு செய்யும்போது, அல்லது குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளை மாற்றும்போது, காவல்துறை அல்லது இதர விசாரணை அமைப்புகளை கலந்தாலோசிப்போம். அப்படி செய்வது நடைமுறைக்கு ஏற்றதாக இல்லாதபட்சத்தில், இறுதி முடிவு எடுக்கும் முன், உத்தேச முடிவானது பொது நலன் அடிப்படையில் இருந்தால் பாதிக்கப்பட்டவரின் சம்பந்தப்பட்ட குற்றத்தின் தாக்கம் குறித்த எந்தக் கருத்தையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பிடத்தகுந்த வழக்குகளில், உதாரணமாக மனித கொலை அல்லது பாதிப்புக்குள்ளானது குழந்தையாகவோ அல்லது மருத்துவ மனநல திறன் சட்டம் 2005 குறிப்பிட்டபடி மருத்துவ திறனற்ற பெரியவராகவோ இருந்தால், வழக்குரைஞர் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினர் தெரிவிக்கும் கருத்துகளை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

8.2 வழக்குத் தொடுநர் ஒரு வழக்கை நிறுத்த முடிவு செய்தால், அல்லது பிரதிவாதி எதிர்கொள்ளும் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளில் கணிசமான அளவு திருத்தம் செய்ய விரும்பினால், சரியான நேரத்திற்குள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர் தனது முடிவு குறித்து தகவல் தெரிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவரின் தேவையை குறிப்பிட்டதாக கடிதம் இருப்பதுடன், வழக்கின் குறிப்பிட்ட சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்றதாகவும் அது இருக்கவேண்டும்.

8.3 மிரட்டலுக்குள்ளான, ஊறுக்குள்ளாகக்கூடிய பாதிக்கப்பட்டவரகள்; நீதிமன்றத்தில் முடிவு எடுக்கப்பட்ட நாளன்று காணப்பட்டால் வழக்குரைஞர் அவர்களுடன் நேரில் பேசவேண்டும். அதன்மேல் நாங்கள் அவர்களுக்கு எழுதுவோம்.

8.4 சில குறிப்பிட்ட சில குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களை, எங்கள் எழுத்து மூல விளக்கங்கள் பற்றிய அவர்களது கேள்விகளுக்குப் பதிலளிக்க வழக்குரைஞர் நேரடியாகச் சந்திக்க முன்வருவார்.

8.5 பாரதூரமான அல்லது சிக்கலான வழக்குகளில், சந்தேக நபர் மீது குற்றச்சாட்டுச் சுமத்த, காவல் துறையினருக்கு அல்லது வேறு விசாரணையாளருக்கு நாங்கள் அதிகாரம் அளிக்காதபோதும் இதுபோன்ற கொள்கைள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இருப்பினும் பெரும்பாலான வழக்குகளில் காவல் துறையினரும் வேறு விசாரணையாளரும் விளக்கம் அளித்து வருகின்றனர்.

# தகுதிநிலை 9

## தீர்ப்பு வழங்கும் செயல்முறையில் நீதிமன்றத்திற்கு உதவியாக இருப்பதோடு, குற்றவாளி அல்லது குற்றத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முடக்குமாறு கோருவோம்[18]

9.1 தண்டனை வழங்குவது நீதிமன்றத்தின் கடமை. வழக்கு விசாரணையின் பங்கு, நீதிமன்றத்திற்கு தண்டனை நடவடிக்கையில் உதவுவதாகும். தேவையான அனைத்து தகவல்களையும், தெரியப்படுத்துதல் மூலம் இதனை நாங்கள் செய்கிறோம்.

9.2 தண்டனை வழங்கும் விசாரணைக்கு முன்:

அ) நன்னடத்தைச் சேவை அல்லது இளையோர் குற்ற சேவைக்கு நாங்கள் வழக்கின் சுருக்கம் ஒன்றை வழங்குவோம். இதனால், தண்டனைக்கு முன்னர் உண்மைநிலை அறிக்கையை நீதிமன்றத்திற்காக அவர்கள் தயாரிக்க ஏதுவாகும்;

ஆ) பாதிக்கப்பட்டவர் தனியான பாதிக்கப்பவரது வாக்குமூலம் அளிக்க விரும்புகிறாரா அல்லது முன்னர் வழங்கிள வாக்குமூலத்தை இற்றைவரையானதாக்க விரும்புகிறாரா என்று சாட்சிய கண்காணிப்பு அலுவலர் அவரைக் கேட்பார், அல்லது கேட்பதற்கு காவல் துறை அலுவலர் ஒருவரை அல்லது வேறு விசாரணையாளரை ஏற்பாடு செய்வார்;

இ) தண்டனை குறித்த பிரச்சினை சிக்கலானதாக அல்லது அபூர்வமானதாக இருந்து அல்லது நீதிமன்றம் நம்மைக் கோரினால், நாம் எழுத்துமூலமான பணிந்துரை ஒன்றைத் தயாரித்து நீதிமன்றத்திடம் சமர்ப்பிப்போம். அது தண்டனைக்குரிய தேவையான பிரிவுகளையும், வழிமுறைகளையும், நடப்பில் உள்ள துணை உத்தரவுகளையும் மற்றும் நீதிமன்றத்தால் அறிய முடியாத இதர தேவையான தகவல்களையும் கொண்டிருக்கும்; மற்றும்

ஈ) தேவைப்பட்டால் சமூக விரோத நடவடிக்கைகள் தொடர்பான உத்தரவுகள் அல்லது தடுப்பு உத்தரவுகள் உள்ளிட்ட துணை ஆணைகள் குறித்த எழுத்துப்பூர்வ விண்ணப்பங்களையும் தயாரிப்போம்.

9.3 விசாரணையில் வழக்குரைஞர்:

அ) வழக்கின் உண்மைகள் குறித்த குறிப்புகளை நீதிமன்றத்திற்கு எடுத்துரைப்பார். குற்றம் குறித்த மோசமான விடயங்களை நீதிமன்ற கவனத்திற்கு கொண்டுவருவார், வழக்கு தொடுப்பில் இருந்து உரிய தண்டனையைத் தணிப்பதற்கான காரணிகளை எடுத்துக் கூறுவார்;

ஆ) நீதிமன்றத்திற்கு, தேவைப்படின் பிரதிவாதியின் விருப்பங்களை கருத்தில் கொள்ளும் வகையிலான ஏனைய குற்றங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை அளிப்பார், நீதிமன்றம் தண்டனையில்[19] அதனைப் பிரதிபலிக்கலாம்;

---

[18] கோரிக்கை ஏற்பு மற்று தண்டனை விதித்தல் செயல்பாட்டில் வழக்குரைஞரின் பங்கு பற்றிய தலைமை சட்ட அலுவலரின் வழிகாட்டுதலில் (*The Attorney General's Guidelines on The Acceptance of Pleas and the Prosecutor's Role*) நீதிமன்றங்கள், வழக்குரைஞர்கள, எதிர்தரப்பு வழக்குரைஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. www.attorneygeneral.gov.uk என்ற வலைத்தளத்தில் கிடைக்கும் அல்லது வேண்டுதலின் பேரில் வழங்கப்படும் (விவரங்களுக்கு பின் அட்டையைப் பார்க்கவும்).

இ) பிரதிவாதிக்கு முன்னர் விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்பு, அவருக்கெதிராகப் பதிவு செய்யப்பட்ட சாதாரண[20] அல்லது நிபந்தனையுடன் கூடிய எச்சரிக்கை என்பனவற்றை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவருவார். எச்சரிக்கைகள் தற்போதைய குற்றச்சாட்டு போன்ற குற்றங்களுக்குப் பொருந்துமானால், அதனைக் குறிப்பாக நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவருவார்;

ஈ) காவல்நிலையத்தில் போதை மருந்து சோதனை ஏதாவது நடத்தப்பட்டிருப்பின் அதன் விளைவு பற்றித் தெரிவிப்பார்; மற்றும்

உ) சாட்சியத்தின் சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் தண்டனைக்கு முந்தைய அறிக்கை இருக்கிறதா என்று சோதிப்பார். அவ்வாறில்லாவிடில் நீதிமன்றத்தின் கவனத்தை ஈர்ப்பார்.

9.4 பிரதிவாதியின் நடத்தையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் வழக்குரைஞர் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவார்:

அ) பாதிக்கப்பட்டவரின் தனிப்பட்ட வாக்குமூலம் இருப்பின் அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கலாம்;

ஆ) பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்க குற்றமிழைத்தவருக்கு உத்தரவிடுமாறு உரிய வகையில் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளலாம்; மற்றும்

இ) தேவைப்படின், குற்றமிழைத்ததால் ஒரு சமூகத்தில் ஏற்பட்ட பாதிப்பு குறித்த ஆதாரங்களை அளிக்கலாம்.

9.5 தண்டனை விடயத்தில் நீதிமன்றத்துக்கு உள்ள தெரிவுகள் முழு அளவில் நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்படுகின்றன என்பதை வழக்குரைஞர் உறுதிப்படுத்த வேண்டும்.

அ) பிரதிவாதிக்கு எதிராக துணை உத்தரவுகளை பிறப்பிக்க நீதிமன்றத்தைக் கோருவதன் மூலம், எதிர்காலத்தில் அதுபோன்ற குற்ற வாய்ப்புகளை குறைக்க முடியும் என கோரலாம். பாதிக்கப்படுபவர்களையும் பாதுகாக்க முடியும் சமூக விரோத நடவடிக்கைகள் தொடர்பான உத்தரவு, தடையுத்தரவு, ஓட்டுநர் தகுதிநீக்க உத்தரவு, பாலியல் தொடர்பான குற்றங்களை தடுக்கும் உத்தரவுகள் இவற்றில் அடங்கும்;

ஆ) பாதிக்கப்பட்டவரின் குணப்பண்புக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலும், முறையான தண்டனை வழங்கல் செயல்பாட்டுக்கு தப்பர்த்தம் உண்டுபண்ணுவதாக

---

[19] கருத்தில் கொள்ளுமாறு நீதிமன்றத்திடம் தான் கேட்க இருப்பதாக முன்னர் கூறிவிட்டு, நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொள்ள ஒரு பிரதிவாதி மறுத்தால், அதற்காக அவர் மீது குற்றம் சாட்ட வேண்டுமா என்று வழக்குரைஞர்கள் கருத்தில் கொள்வர், இது குறித்து பிரதிவாதியின் வழக்குரைஞரிடம் அந்தக் குற்றச்செயல் அடுத்த கட்ட நடவடிக்கைக்குப் பரிசீரிலிக்கப்படும் என்று விளக்குவர்.

[20] இளம் வயது குற்றவாளிகளுக்கு சாதாரண எச்சரிக்கை வழங்கக் கூடாது. இருப்பினும், அவர்களுக்கு, கண்டனம் அல்லது இறுதி எச்சரிக்கை வழங்கலாம். எங்கள் வசதிக்காக, தண்டனைகளையும் குறிக்க, எச்சரிக்கை என்ற சொல்லை இந்தத் தகுதிநிலைகளில் பயன்படுத்துகிறோம். இளம் வயது குற்றவாளிகளுக்கு நிபந்தனையின் பேரில் எச்சரிக்கை வழங்கலாம்.

அல்லது சம்பந்தமில்லாத வகையில் பிரதிவாதி தரப்பின் தண்டனைத் தணிப்பு அமையும் பட்சத்திலும், அக்கோரிக்கையை ஆட்சேபிக்கவேண்டும்;

இ) பிரதிவாதியின் கட்டுப்பாட்டிலிருந்த அல்லது அவர் புரிந்த குற்றத்தின்போது பயன்படுத்தப்பட்ட போதை மருந்து மற்றும் ஆயுதங்கள் போன்ற பொருட்களை அழித்துவிட உத்தரவு இடுவதைக்கருத்தில் கொள்ளுமாறு நீதிமன்றத்தைக் கோருதல்;

ஈ) தண்டனை நடைமுறையில் நீதிமன்றத்திற்கு பொதுவாக உதவி செய்தல், இதனை சம்பந்தப்பட்ட சட்ட விதிகள், தண்டனை விதிப்பு வழிகாட்டிகள், வழக்குகள் காட்டும் வழிமுறைகள் என்பனவற்றை, நீதிமன்றத்தின் கவனத்துக கொண்டுவருவதன் மூலம் செய்யலாம். இவற்றில் உள்ளடங்குவதாக குற்றம் நடந்த சூழலையும் நீதிமன்றத்துக்குச் சுட்டிக்காட்லாம். குறிப்பாக குற்றம் துவேஷத்தைக் கிளறும் ஒன்றாகக் காணப்பட்டால் சட்டம் நீதிமன்றம் விதித்த தண்டனையை அதிகரிக்குமாறு கூறுகிறது.

உ) வழக்குரைஞர், 9.3. மற்றும் 9.4 பத்திகளில் உள்ள காரணிகளைக் கருத்தில் கொண்டு, நீதிமன்றத்துக்கு முழு அளவில் தண்டனை விதிப்பு வழிகளை எடுத்துக்கூறி மேலும் உதவலாம். இந்தத் தண்டனை விதிப்பு முறைகளுக்குள்ளேயே தற்போது சொல்லப்பட்ட குற்றம் அடங்குகிறது.

9.6 நீதிமன்றத்திற்கு வழக்கைக் கொண்டுவந்ததற்காக முழு செலவையுமோ அல்லது பகுதி தொகையையோ குற்றமிழைத்தவர் வழங்க உத்தரவிட வேண்டும் என்று நீதிமன்றத்தை வழக்குரைஞர் கேட்டுக் கொள்ளலாம். அவ்வாறு செய்யத் தேவையில்லை என்பதற்கு நல்ல காரணம் இருத்தல் வேண்டும்.

9.7 தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கு வழக்கு தொடுநருக்கு அதிகாரம் இல்லை. குறிப்பிட்ட சில க்ரவுன் நீதிமன்ற வழக்குகளில், தலைமைச் சட்ட அதிபர் (அட்டோர்னி ஜெனரல்) வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு, தண்டனை அதீதமாக இலகுவானதாக இருக்கிறது என்ற அடிப்படையில், மேல்முறையீட்டுக்கு அனுப்பலாம். வேறு வார்த்தைகளில், நீதிபதி வழங்கிய தண்டனை அவருக்குரிய நியாயமான வரம்பெல்லைக்கு அப்பாற்பட்டது என்பதாகும். தண்டனை வழங்கப்பட்ட சிறிது காலத்துக்குள் தலைமைச் சட்டத் தலைவரை மேன்முறையீடு செய்யச்சொல்லவேண்டுமா என்று நாங்கள் தீர்மானிக்கிறோம். தலைமைச் சட்ட அதிபர் தன்விருப்பிலும், பாதிக்கப்பட்டவர் அல்லது பொதுமக்களில் ஒருவர் கோரிக்மையின் பேரிலும் மேன்முறையீட்டுக்கு விடுவது பற்றித் தீர்மானிக்கலாம் அவ்வாறு செய்யத் தீர்மானிப்பாராயின் தண்டனை விதிக்கப்பட்ட 28 நாட்களுக்குள் அவர் அவ்வாறு செய்தல் வேண்டும்.

9.8 ஒரு சாட்சி கண்காணிப்பு அதிகாரி எந்த பாதிக்கப்பட்டவரிடமும், பொது சாட்சியிடமும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனையை குறுகிய காலத்திற்குள் தெரிவித்து விட வேண்டும். தண்டனை விவரங்களை எளிதான நடைமுறை மொழியில் விளக்கம் அளிக்க வேண்டும்.

**குற்றத்தின் பெறுபேறுகளைப் பறிமுதல் செய்தல்**

9.9 சில வழக்குகளில் சந்தேக நபர் அல்லது பிரதிவாதி தனது குற்றத்தின் மூலம் பலன் அடைந்திருப்பது தெரிய வந்தால், அவர் தனது அச்சொதுக்களைப் பயன்படுத்துக்கூடும் அல்லது விற்கக்கூடும் என்ற அச்சம் ஏற்படும். இந்நிலையில் காவல் துறையினர் அல்லது வேறு விசாரணையாள்ர்கள் இதுபற்றி அறிவித்த சிறிது காலத்துக்குள் நாங்கள் நீதிபதி ஒருவரிடம் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோருவோம். இது குறிப்பிட்ட சந்தேக நபர் அல்லது பிரதிவாதி அச்சொத்துக்களில் வியாபாரம் செய்வதை அல்லது

அவற்றை வற்றுத்தீர்ப்பதைத் தடுப்பதற்காகும். துடை உத்தரவு ஒன்று எப்போது பொருத்மானது என்று நாங்கள் காவல் துறையினருகு;கு அல்லது வேறு விசாரணையாளருக்கு ஆலோசனையும் வழங்குகிறோம். துடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டவுடன் அதில் ஒரு நகலை சந்தேக நபர் அல்லது பிரதிவாதிக்கும் நகல்களை, வங்கிகள், கட்டட சங்கங்கள் போனற அமைப்புக்களுக்கும் அனுப்புகிறோம். அவை சந்தேக நபர் அல்லது பிரதிவாதி சொத்துக்களை பயன்படுத்தவிடாது தடுத்துவிடும். சில சமயங்களில் இதனைச் செய்யுமாறு காவல் துறையினரை அல்லது வேறு விசாரணையாளரை நாங்கள் கேட்பதுண்டு. இதுபோன்ற வழக்கில் காவல்துறை அல்லது விசாரணை அதிகாரியிடம் இருந்து கோரிக்கை பெற்று குறுகிய காலத்திற்குள் தடையுத்தரவை வழங்க நீதிமன்றத்தை கேட்டுக் கொள்ள வேண்டும்.

9.10 காவல்துறை அல்லது இதர விசாரணை நிறுவனங்களிடம் இருந்து வரும் இதர வழக்குகள் குற்றத்தின் பயனாகப் பெறப்பட்ட சொத்துக்களின் பறிமுதலுக்குப் பொருத்தமானவையா என்பதைப் பரிசீலனை செய்வோம். அப்படி இருப்பின் போதுமான மதிப்புடைய சொத்துகள் சம்பந்தப்பட்ட நபர்களிடம் உள்ளதா என்பதை காவல் துறையினர் மற்றும் வேறு விசாரணையாளரை, சம்பந்தப்பட்டவர்களிடம் போதுமான சொத்துக்கள் உள்ளனவா எனக் கண்டறியுமாறு கோருவோம். இது நீதிமனறத்திடம் சொத்துக்களைப் பறிமுதல் செய்யுமாறு கோருவதற்காகும்., நீதிமன்றத்தில் பறிமுதலுக்கு கோரிக்கை வைக்கலாம்.

9.11 பிரதிவாதி தண்டனை பெற்றால், அவரின் பறிமுதல் செய்யப்படும் தொகைக்கு உரிய கால நிர்ணய அட்டவணையைக் கோர வேண்டும். தண்டனை பெறும் அதே நேரத்தில் பறிமுதல் செய்யப்படுவதும் மேற்கொள்ள கோரலாம்.

9.12 எவ்வளவு விரைவில் இயலுமோ அதற்குள் நேரம் வகுத்து, காவல்துறை அல்லது விசாரணை நிறுவனங்கள் மூலம் அவர்களின் விசாரணையை இறுதி செய்து குற்றம் புரிந்தவரின் நிதி மற்றும் சொத்து நிலையை கேட்டறிதல் வேண்டும்.

9.13 பறிமுதல் தொடர்பான வழக்கு விசாரணைக்கு முன் நீதிமன்றத்திற்கு பிரதிவாதியின் கண்டுபிடிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான சுருக்க விபரம் ஒன்றை நாம் அனுப்ப வேண்டும். அப்போதுதான் சொத்து தொடர்பான தகராறுகள், உரிமை அல்லது மதிப்பு நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படும். எவ்வளவு தொகையை குற்றவாளி செலுத்த வேண்டும் என்பதை நீதிமன்றத்தைத் தீர்மானிகக் கோருவோம்.

9.14 சில வழக்குகளில் நீதிமன்ற ஊழியர்கள் பறிமுதல் தொகையை வசூலிப்பதற்கு பொறுப்பானவர். சில சிக்கலான வழக்குகளில் அதனை செயல்படுத்துவது கடினம். சொத்துகளை விற்று அதற்குரிய தொகையை பெற வேண்டி வரலாம். பெறுபவரின் நியமனம் இதில் தொடர்புடையதாகும்.

9.15 பணம் செலுத்த வாதி தாமதித்தாலோ அல்லது தவிர்த்தாலோ, நாம் அதிகாரத்தைப் பயன்படுத்தி நீதிமன்றத்திற்கு மீண்டும் வழக்குகளைக் கொண்டு செல்ல வேண்டும்.

# தகுதிநிலை 10

## நீதிமன்றம் தவறான சட்ட முடிவை எடுத்துள்ளது என்று நாங்கள் நம்பினால், மேல்முறையீடு செய்யும் எங்கள் உரிமையை பயன்படுத்துவது குறித்து நாங்கள் பரிசீலிப்போம்

10.1 வழக்கு தொடுப்போர் மேல்முறையீடு செய்ய வரம்புக்குட்பட்ட உரிமை மட்டுமே உள்ளது. பின்வரும் சூழ்நிலைகளில், நீதிமன்ற முடிவுகளை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வேண்டுமா என்பது குறித்து நாங்கள் முடிவெடுப்போம்:

அ) உடனடியாக, தீவிரமான வழக்குகளில் மாஜிஸ்திரேட்கள் பிணை வழங்கும்பட்சத்தில், அரச நீதிமன்ற நீதிபதியின் பிணை வழங்கல் மறுபரிசீலனை நிலுவையில் இருக்கும்போது, பிரதிவாதி காவலில் வைத்திருக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கருதினால்.

ஆ) 24 மணி நேரத்தில், தலைமை அரச வழக்கு தொடர்பவர் அல்லது சம்பந்தப்பட்ட தலைமைப் பணியிடப் பிரிவுத் தலைவரின் ஒப்புதல் இருந்தால், தடையத்தை தீர்ப்பாயம் கருத்தில் கொள்வதற்கு முன், ஒரு வழக்கை நீதிபதி நிறுத்தினால், அந்த வழக்கு கூடிய விரைவில், மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் மறுபரிசீலனை செய்யப்படும் பொருட்டு.; மற்றும்

இ) வரம்புக்குட்பட்ட வழக்குகளில், தண்டனை வழங்கப்பட்டபின் குறுகிய நேரத்தில், ஏற்றுக்கொள்ளாத அளவுக்கு கனிவுடையதாகக் கருதப்படுகிறது என்று மேல்முறையீட்டு நீதிமன்றத்திடம் சட்டத் தலைமை அலுவலர் மேற்கோளிட்டுக் காட்டும்படி நாங்கள் கேட்கலாம். தண்டனைத் தீர்ப்பு ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு மிகவும் கனிவுடையதாக இருப்பதாக யாரேனும் எங்களைத் தொடர்பு கொண்டால், அந்த வழக்கை சட்டத் தலைமை அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு செல்வோம், ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு மிகவும் கனிவுடையதாக இருப்பதாக நாங்கள் கருதாத பட்சத்தில், நேரிடையாக சட்டத் தலைமை அலுவரிடம் புகார் அளிக்கும் அவர்களது உரிமையை சம்பந்தப்பட்ட நபரிடம் தெரிவிப்போம். பாதிக்கப்பட்டவர் அல்லது அவருடைய குடும்பத்தினரிடம், தண்டனைத் தீர்ப்பை மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு சட்டத் தலைமை அலுவலரிடம் கேட்கும் அவர்களுக்குரிய உரிமை பற்றி அவர்களுக்குத் தெரிவிப்போம்.

10.2 நீதிமன்றம் சரியான செயல்முறையைப் பின்பற்றவில்லை, மிகவும் தவறான முடிவை எடுத்து விட்டதாக, அல்லது அந்த சட்டம் உயர்நீதிமன்றத்தால் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் எண்ணும் சூழல்களில், இன்ன பிற மேல்முறையீடுகளைப் பயன்படுத்துவது குறித்து நாங்கள் கருத்தில் கொள்வோம்.

10.3 நீதிமன்ற முடிவை எதிர்த்து பிரதிவாதி மேல்முறையீடு செய்யும்போது, மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீடுகளைத் தவிர்த்து, எங்களைப் பிரதிநித்துவப்படுத்த அல்லது நீதிமன்றத்திற்கு உதவ, ஒரு வழக்குரைஞரை நாங்கள் நியமிப்போம், அப்படிப்பட்ட விதிவிலக்கை மீறி நாங்கள் கட்டாயம் வழக்காடும் சூழல் ஏற்பட்டால் நாங்கள் செல்வோம்.

10.4 மேல்முறையீட்டு நீதிமன்றம் ஒரு முடிவை எடுத்தபின், அதை எதிர்த்து மேல்முறையீடு செய்ய விரும்பினால், உச்சநீதிமன்றம் முடிவெடுக்கும் அளவுக்கு பொதுமக்கள் நலன் குறித்த முக்கியத்துவம் அந்த வழக்கில் உள்ளது என்று

சான்றளிக்குமாறு மேல்முறையீட்டு நீதிமன்றத்திடம் கேட்க வேண்டுமா என்பது குறித்து நாங்கள் முடிவெடுப்போம். பிரதிவாதியால் உச்சநீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்ட வழக்குகளை முடிவு செய்ய நாங்கள் அங்கு ஆஜராகி உதவியாக இருப்போம்.

10.5 மேல்முறையீடு குறித்த போக்கு பற்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு நாங்கள் தெரிவிப்பதோடு, நீதிமன்றத்தின் முடிவுகளால் ஏற்படும் விளைவுகள் குறித்து அவர்களுக்கு நாங்கள் விளக்குவோம்.

# தகுதிநிலை 11

## எங்கள் முடிவுகள் மற்றும் நாங்கள் வழங்கும் சேவை குறித்த புகார்களை உடனடியாகவும் வெளிப்படையாகவும் கையாள்வோம்

11.1 நாங்கள் வழங்கும் சேவையின் தரம் குறித்த புகார்களை முடிந்த அளவுக்கு விரைவாக எதிர்கொள்ளும் நோக்கத்தில் பணியாற்றுகிறோம்.

11.2 புகாருக்கு உடனடியாக தீர்வு காண முடிந்தால் நாங்கள் அதைச் செய்வோம்; அல்லது, அந்தப் புகார் முறையாகப் பதிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு நிலையாக அது அணுகப்படும், முதலில் அடிப்படை நிலையிலிருந்து தொடங்கப்படும்.

11.3 ஒவ்வொரு நிலையிலும், புகார்களை நாங்கள் ஏற்று, முடிந்த அளவுக்கு அவற்றை விரைவாகப் பதிவு செய்வோம், பின்னர், கூடிய விரைவில், அந்தப் புகாருக்கான எங்கள் பதிலை நாங்கள் விரைவாக வழங்குவோம்.

11.4 சம்பந்தப்பட்ட நிகழ்வு நடந்து முடிந்த 6 மாதங்களுக்குப் பிறகு பெறப்படும் புகார்களை தாமதத்துக்கு நியாயமான காரணங்கள் இருந்தாலொழிய, நாங்கள் நிராகரிப்போம்.

11.5 பிதற்றலான அல்லது தொழில்நுட்ப மொழி அல்லாத தெளிவான மொழியில் நாங்கள் வெளிப்படையாகவும், தைரியமாகவும், விரிவாகவும் அனைத்து வினாக்களுக்கும் பதிலளிப்போம். தகுந்த இடங்களில், குற்றத்தை ஒப்புக் கொண்டு, மன்னிப்பு கேட்போம். அது போன்ற தவறு மீண்டும் நடைபெறாமல் இருக்க, இது போன்ற அனுபவங்கள் மற்றும் அவற்றைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் பதிவு செய்வோம்.

11.6 காவல்துறை அல்லது நீதிமன்றங்கள் போன்று, மற்ற முகமை தொடர்பாக ஏதும் புகார்கள் எழுந்தால், சம்பந்தப்பட்ட முகமையுடன் எங்கள் பதிலை ஒத்துப்போகச் செய்வோம், அல்லது சம்பந்தப்பட்ட புகார் குறித்து நேரிடையாக அவர்கள் பதில் அளிப்பார்கள் என்று இணங்கி, முறைப்பாட்டாளருக்கு யார் பதில் அனுப்புவார்கள் என அறிவிப்போம்.

# தகுதிநிலை 12

## சமூகங்களுடன் தொடர்பிலேயே இருப்போம், இது நாங்கள் முடிவெடுக்கும்போது அவர்களின் எண்ணத்தை புரிந்து கொள்ள உதவும்

12.1 எங்கள் பங்கு குறித்து உள்ளூர் சமுகங்களிடம் விளக்குவது மட்டுமின்றி சமூகக் குழுக்கள் மற்றும் அமைப்புகள் மூலம் நாங்கள் எதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது குறித்து ஆலோசனை பெற விரும்புகிறோம்.

12.2 எங்களின் முடிவெடுக்கும் திறன் மற்றும் எங்களின் வழக்கு கையாளும் செயல்திறன் குறித்து சமுகங்கள் எப்படி நோக்குகின்றன என்பது குறித்த கருத்துரைகளை இந்தக் குழுக்கள் மற்றும் மீளாய்வு அமைப்புகள்[21] வழங்குகின்றன.

12.3 எங்கள் வழக்குகளை நாங்கள் எப்படி மேற்கொள்கிறோம் என்று மதிப்பாய்வு செய்ய, கருத்துரைகளை நாங்கள் பயன்படுத்துகிறோம்.

12.4 சமூக விரோத நடவடிக்கைகள் போன்று, அக்கம்பக்கம் மற்றும் சமூகங்களில் முன்னுரிமை கொடுக்கப்படும் விடயங்களுக்கு பதிலளிக்க, காவல்துறை மற்றும் உள்ளூர் சமூகங்களுடன் நாங்கள் பணியாற்றுகிறோம்.

[21] இந்தக் குழுக்கள் மற்றும் மீளாய்வு அமைப்புகள் குறித்த மேலும் விவரங்கள் எங்கள் வலைத்தளத்தில் (www.cps.gov.uk) கிடைக்கும் அல்லது வேண்டுதலின் பேரில் வழங்கப்படும் (விவரங்களுக்கு பின் அட்டையைப் பார்க்கவும்).

இது ஒரு பொது ஆவணம்.

இந்த ஆவணத்தின் கூடுதல் நகல்களும் வேறு மொழி மற்றும் வடிவமைப்பு பற்றிய தகவல்களும் இந்த முகவரியில் கிடைக்கும்:

CPS கம்யூனிகேஷன் டிவிஷன்
ரோஸ் கோர்ட்
2 சவுத்வார்க் ப்ரிட்ஜ்
லண்டன் SE1 9HS

மின்னஞ்சல்: **publicity.branch@cps.gsi.gov.uk**

அரச வழக்குத் தொடுத்தல் சேவை பற்றிய தகவல்களுக்கும் இந்த ஆவணத்தின் மின்னணு நகலைக் காண அல்லது பதிவிறக்கவும், எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடுக:

**www.cps.gov.uk**

© கிரௌன் பதிப்புரிமை 2010
அச்சிட்டது: பிளாக்பர்ன்ஸ் ஆஃப் போல்டன்